வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.04.2023 புதன்கிழமை | இதழ் : 131 | பக்கங்கள் : 16

## அம்மன் சிலை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 19

பண்ணையில் அமைக்கப்பட்ட நயினாதீவு நாக பூசணி அம்மனை பிரதிபலிக்கும் சிலையை அகற்று வது தொடர்பான வழக்கை மேல் நீதிமன்றம் எதிர்வரும் மே 04ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன், என். சிறீகாந்தா உள்பட 15 வரையான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

முறைப்பாட்டாளர் இன்றி பொலிஸார் இந்த வழக்கை தொடுக்க உரிமை இல்லை 15

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# சூத்திரதாரிகளை தேடாதீர்கள் கிடைக்கப் போவதும் இல்லை!

## வஜிர அபேவர்த்தன எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை தேடுவதற்கு முயற்சிக்கவேண்டாம் - கிடைக்கப்போவதும் இல்லை. ஏனெனில், இலங்கையில் இதற்கு முன்னர் பெருமளவில் உயிர்கள் இழக்கப்பட்ட போதும் அந்த சூத்திரதாரிகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை என்று கூறியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன. 15

## அமைச்சு பதவி மாற்றம் வெறுமனே வதந்தியே!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 19

புதிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வுள்ளன என்று கூறப்படு கின்றமை வதந்திகளா கும். எவ்வாறிருப்பினும் தேவையேற்படின் அமைச்சரவையில் திருத் தங்களை மேற்கொள்ள வும் புதிய நியமனங்களை வழங்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள் ளார்.

எதிர்க்கட்சியிலிருந்து பலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர். அவர் களுக்கு அமைச்சுப் பதவி கள் வழங்கப்படவுள்ளன என்று கூறப்படும் கருத்துகள் தொடர்பில் 15



புனித ரமழான் நோன்பை முன்னிட்டு நடத்தப்படும் தேசிய இப்தார் நிகழ்வு நேற்று பிரதமர் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றவேளை...!

### ஐ. எம். எவ். கடன் தொடர்பில்:

## பாராளுமன்றின் ஒப்புதலை பெற அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஏப். 19

சர்வதேச நாணய நிதி யத்தின் (ஐ. எம். எவ்.) நீடிக்கப்பட்ட கடன் வசதி செயல்பாடுகளுக் கான பாராளுமன்ற அனு மதியைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதி யத்தின் நிறைவேற்று சபையால் கடந்த மார்ச் 22ஆம் திகதி 48 மாதங்க ளுக்கான இலங்கை 290 கோடி டொலர்களை நீடிக்கப்பட்ட கடன் வசதியாகப் பெற அனுமதி 15

## ‘அறகலய’வுக்கான எதிர்வினையே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

### பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட



கொழும்பு, ஏப். 19

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசாங்கம் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கடந்த வரு டத்தைய ‘அறகலய’ மக்கள் போராட்டத்துக்கான எதிர்வினை என்று அரசமைப்பு நிபுணர் பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட கூறியிருக்கிறார்.

நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறையில் இருந்து வரும் பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கு 15

## சர்வ கட்சி அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சேராது!

### சஜித் பிரேமதாஸ புதிய அறிக்கை

கொழும்பு, ஏப்.

மக்கள் ஆணை இல்லாதவர்களுடன் சர்வ கட்சி அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அங்கம் வகிக்காது என்று அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கமும் ஜனாதிபதியும் சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பில் பொய்யான செய்திகளை பரப்பி வருகின்றனர். அவர்கள் 15

## அரசுக்கு எதிரான யாத்திரை இன்று 5 இடங்களில் ஆரம்பம்!


### நல்லூரில் இருந்தும் யாத்திரை

யாழப்பாணம், ஏப். 19

அரசாங்கத்துக்கு எதி ரான ‘பாசத்துக்கான யாத்திரை’ இன்று புதன் கிழமை யாழ்ப்பாணம் உட்பட ஐந்து நகரங் களில் ஆரம்பமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பிரதி செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் தெரிவித்துள் ளார்.

நேற்று யாழ்ப் பாணத்தில் அவர் 15

## அன்னை பூபதியின் நினைவேந்தல் இன்று



மட்டக்களப்பு, ஏப். 19

அன்னை பூபதியின் 35ஆவது நினைவேந்தல் இன்றாகும். இதையொட்டி வடக்கு - கிழக்கு எங்கும் எழுச்சியாக நினைவேந் தலை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

பிரதான நிகழ்வு மட்டக்களப் பில் நடைபெறவுள்ளது.

அன்னை பூபதி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த மாமாங்க பிள்ளையார் ஆலயத்தில் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை சமய அநுஷ்டா னங்கள் நடைபெறும். இதைத் தொடர்ந்து 15

## அடிப்படைவாத அரசியல் தேவைக்கு இளைஞர்களை இரையாக்க முயற்சி!

### புலனாய்வுதுறை அறிக்கை என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஏப். 19

கல்வி பொதுத் தரா தர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை தாமத மாக்கி - இளைஞர்களை சிரமங்களுக்கு ஆளாக்கி அவர்களை அடிப்படை வாத அரசியல் தேவைக ளுக்காக இரையாக்கிக் கொள்ள முயற்சிகள் நடக் கின்றன என்று புல னாய்வு துறை அறிக் கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது எனக் கல்வி அமைச் சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துட னான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தி டும் நிகழ்வு நேற்று நடை பெற்றது. அங்கு பேசுகையிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

உயர்தர பரீட்சை விடைத் தாள் மதிப்பீட்டு நடவடிக்கை தாமத மாவதன் காரணமாக 18, 20 வயதுடைய இளை ஞர்கள் கடும் அசௌ கரியங்களுக்கு ஆளா கின்றனர். அந்த இளைஞர்களை தவறாகப் பயன்படுத்தி, குறுகிய அரசியல் நோக்கத்தை அடைந்துகொள்ள - அடிப்படைவாத குறுகிய அரசியல்வாதி கள் பிரிவொன்று முயற்சித்து வருவதாக கடந்த வார புலனாய்வு பிரிவின் அறிக்கை மூலம் தெரிய 15

## சீன ராடர் தளம் மறுக்கிறது அரசு

கொழும்பு, ஏப். 19

இந்தியாவை கண் காணிக்கும் வகையில் தென்னிலங்கையில் ராடர் தளத்தை சீனா அமைக்கி றது என்ற தக வலை அர சாங்கம் மறுத் துள்ளது.

ருகுணை பல்கலைக் கழகத்தின் உதவியுடன் தெவிநுவர தெற்கு நகரத் தில் ராடர் தளத்தை சீனா அமைக்கிறது என்ற தக வலை முற்றாக மறுப்பதாக அமைச்சரவை பேச் சாளர் அமைச்சர் பந்துல குண வலர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் 15

# இப்படியும் நடக்கிறது...!

மீண்டும் சிலை பேசுபொருளாகியிருக்கின்றது.

பண்ணை சுற்றுவட்டாரத்தில் திடீரென காணப்பட்ட நயினை நாகபூசணி அம்மனை ஒத்த அந்தச் சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கு பொலிஸார் நீதிமன்றத்தை நாடியிருக்கின்றனர்.

அந்தச் சிலையை அங்கு கொண்டுவந்து வைத்தவர்கள் யாரென்பது இன்னமும் தெரியவரவில்லை. ஆனாலும், வைக்கப்பட்ட பின்னர் பாலாபிசேகம் செய்தவர்கள் உருத்திரசேனை என்ற பெயரில் இயங்குபவர்கள் என்பதும் - அவர்களையும் பொலிஸார் விசாரணை செய்ததும் செய்திகளாக வெளிவந்திருந்தன. தாம் அந்தச் சிலையை வைக்க வில்லை என்றும் அவ்வாறு காணப்பட்ட பின்னர் தாம் பாலாபிசேகம் செய்ததாகவும் உருத்திரசேனை அமைப்பினர் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் சிலை மிக நேர்த்தியாக செய்யப்பட்டதிலிருந்து அதனை ஒரு சில நாட்களில் செய்திருக்க முடியாது என்ப தைப் புரிந்துகொள்ள முடி கின்றது. நீண்ட நாட்களுக்கு முன்னரே அது குறித்து திட்டமிடப்பட்டது என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ளலாம்.

இந்த சிலையை அகற்றுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனரென செய்திகள் வெளிவந்ததும், ஈழத்து சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், அந்த இடத்தில் பல ஆண்டுகளாக ஒரு நாக அம்மன் சிலை இருந்ததாகவும் அதனை தீவுப்பகுதிக்கு செல்லும் பயணிகள் வழிபட்டு சென்றுவந்தனர் எனவும் தெரிவித்திருந்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்த பல விடயங்கள் இந்த ஊர்க்குருவிக்கு புதியவை. ஆனாலும், அது குறித்த வரலாற்றை சச்சிதானந்தன் விபரித்திருக்கிறார்.

அவரின் அறிக்கை இப்படிச் சொல்கின்றது:

'யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்த அருள்மிகு நாகபூசணித் திருவுருவம் வரலாற்றுச் சிறப்புடைது. மகாவம்சம் கூறும் மகோதரனும் குலோதரனும் அவன் முன்னோரும் வழிபட்டது.

அத்திருவுருவத்தை முதலில் அழித்தவர் போர்த்துக்கேயக் கத்தோலிக்கர். ஒல்லாந்தர் காலத்திலும் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைக்க வில்லை. ஆங்கிலேயர் காலத்தில் பண்ணையில் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைத்தனர். மகாவம்சம் கூறும் நாக மன்னர்களான மகோதரனும் குலோதரனும் முன்னோரும் வழிபட்ட திருவுருவத்தையே மீளமைத்தனர்.

பண்ணைப் பாலம் கட்ட முன்பு, படகில் மண்டைதீவு, வேலணை, புங்குடு தீவு, நயினாதீவு செல்வோர் பண்ணைக் கடலைக் கடந்தனர். அருள்மிகு நாகபூசணி திருவுருவத்தை வணங்கியே - வழிபட்டே படகுகளில் ஏறினர். அங்கிருந்து படகுகளில் வந்து கரையிறங்கி யாழ்ப்பாணம் செல்வோரும் வணங்கி வழிபட்டு மாநகர் புக்கனர்.

பழமை வாய்ந்தது. புத்தர் வருமுன்பே நாகர்களின் வழிபடும் திருவுருவமானது. அண்மைய 30 ஆண்டுப் போர்க் காலத்தில் சிதறிச் சின்னாபின்னமாகியது. மீளமைத்தவர் நாகர்களின் தோன்றலரான நம்பிக்கையாளர்.' -இப்படிச் சொல்லியிருக்கிறார், சச்சிதானந்தன்.

அவர் சொல்வதுபோல அந்த இடத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நாகபூசணித் திருவுருவச் சிலை இருந்தது என்றால், அதனை வரலாற்று ரீதியாக நிறுவிஇ அதற்கான அனுமதியை பெற்று அமைத்திருக்கலாமோ என்று எண்ணாமலும் இருக்கமுடியவில்லை.

ஆனாலும், இதுபோன்ற வீதியோரங்களில் ஆங்காங்கே காணப்படும் சிலைகள் அனைத்துமே முறையான அனுமதி பெறப்பட்டுத்தான் கட்டப்பட்டனவா என்றால் அதிலும் பதில் கிடைப்பது சிரமமானதுதான்.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் அனைத்திலும் மிகப்பெரிய புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றமையைக் காணலாம். அவை யாரின் அனுமதியுடன் கட்டப்பட்டவை என்பதை ஆராய்ந்தால் பதில் கிடைப்பது கடினம்.

அந்த அம்மன் சிலையை நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸார் அகற்றுவார்கள் என்றால், அதுபோலவே வீதிகள் தோறும் காணப்படும் சிலைகள் எல்லாமே அனுமதியுடன்தான் கட்டப்பட்டனவா என்பதை அறிந்து அவ்வாறு அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட எல்லாச் சிலைகளையும் பொலிஸார் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**- ஊர்க்குருவி**

# அன்னை பூபதி ஊர்தி; மாமாங்கத்தில் அஞ்சலி!



மட்டக்களப்பு, ஏப். 19

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட அன்னை பூபதி ஊர்தி நேற்று அவர் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த மாமாங்க பிள்ளையார் ஆலயத்தில் அஞ்சலி செலுத்தியது.

இந்திய படையினருக்கு எதிராக இரு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்த் தியாகம் செய்த அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

இதையொட்டி, யாழ்ப்பாணம் - நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் இருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஊர்தி பவனியை ஆரம்பித்தது. நேற்று மட்டக்களப்பு - மாமாங்கத்தை அடைந்த ஊர்தி நேற்றைய தினமே அம்பாறையை நோக்கி பயணமானது. இன்றைய தினம் அன்னை பூபதி நினைவேந்தல் இடத்தை ஊர்தி வந்தடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இளம் ஆசிரியை வன்புணர்வு பாடசாலை அதிபர் கைது!

கொழும்பு, ஏப். 19

இளம் ஆசிரியை ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கம்பஹா - மினுவாங்கொடை தனியார் பாடசாலை ஒன்றின் அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையின் 60 வயதுடைய அதிபர், பாடசாலை மூடப்பட்டிருந்த போது, 22 வயதுடைய ஆசிரியையை விசேட பணிக்காக பாடசாலைக்கு வரவழைத்தே இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் நடந்த உடனேயே மினுவாங்கொடை பொலிஸின் பெண்கள் மற்றும் குழந்தைகள் பணியகக் கிளையில் குறித்த ஆசிரியர் முறைப்பாடு செய்ததையடுத்து, அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட ஆசிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சந்தேக நபரான அதிபரிடம் மினுவாங்கொடை பொலிஸ் பிரிவின் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகக் கிளையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிவசிதம்பரம் நூற்றாண்டு மலர் வெளியீட்டுக்கு ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம் ஏப். 19

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் முருகேசு சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு மலர் ஒன்றை வெளியிடுவதற்கு அவரது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியில் 'சிவசிதம்பரம் நூற்றாண்டு விழாக்குழு' ஏற்பாடுகளை செய்துவருகிறது.

அவரின் பிறந்த தினமான 20 ஜூலை 2023 மலரை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

அவர் பற்றிய ஆக்கங்கள், புகைப்படங்கள் மற்றும் ஆவணங்கள் வைத்திருப்போர் 077 117 4956 கைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நூற்றாண்டு விழாக்குழு கேட்டுக்கொள்கிறது.

# கண்டிய சட்டம் திருத்தப்படும்

கொழும்பு, ஏப். 19

கண்டிய சட்ட பிரகடனம் மற்றும் திருத்தக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கண்டிய சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திருமணங்களின்போது விதவைகளுக்கு ஏற்படும் தீமை பயக்கும் நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்கு இயலுமாகும் வகையில் பொதுவான சட்டத்தின் கீழ் விதவை ஒருவருக்கு உரித்தாகும் உரிமைகள் கண்டிய சட்டத்தின் கீழ் திருமணமாகி விதவைகளுக்கும் உரித்தாகும் வகையில் ஏற்பாடுகளை வகுத்துத் தருமாறு கண்டிய சமூகத்தவர்கள் நீண்டகாலமாகக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இதற்கமைய, கண்டிய சட்டப் பிரகடனம் மற்றும் திருத்தக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கும் அதற்காக திருத்தத்தை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# துப்பாக்கி உரிமங்கள் இரத்தாகும்

கொழும்பு, ஏப். 19

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 375 துப்பாக்கிகளின் உரிமத்தை இரத்து செய்து அந்தத் துப்பாக்கிகளை திரும்பப் பெற விவசாய அமைச்சு முடிவு செய்துள்ளது.

வன விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாப்பதற்காக வடமேல் மாகாணத்தில் உள்ள தென்னைப் பயிர்ச் செய்கை விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

பயிர்களைப் பாதுகாக்க அவர்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகள் பயன்படுத்தப்படாது காணப்படுகிறது. இதையடுத்தே அமைச்சு இந்த முடிவை எடுத்துள்ளது. (ஐ)

# பல்கலை. புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் அடுத்த வாரம்!

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு, பதிவுகளை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி, புதன்கிழமை காலை 9.00 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து, முகாமைத்துவம் மற்றும் வணிகம் ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வே அன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு - கலாசாலை வீதியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள், வணிக பீட கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு தொடர்பான அறிவுறுத்தல்கள் பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் மற்றும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் றறற. அயஉழ.தகஉ.யஉ.டம என்ற இணையத்தளத்தில் விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், 2021/2022 கல்வியாண்டுக்காகப் பதிவு செய்த சகல மாணவர்களையும் இந் நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறும் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu
18.04.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர்களுக்கான வெளிவிவகாரக் கொள்கை?

தமிழர்கள் ஒரு தேவையான மக்கள் கூட்டம். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு தமிழர்களில்தான் தங்கியிருக்கின்றது. இதனை சரியாகப் புரிந்து கொண்டு தமிழர்களுக்கான ஒரு வெளிவிவகாரக் கொள்கையை உருவாக்கிக்கொள்ள வேண்டும் - பின்னர் அதனடிப்படையில் இந்தியா, அமெரிக்காவை கையாள வேண்டும். இவ்வாறு வாதிடும் சிலர் உண்டு. வெளிவிவகாரக் கொள்கையென்பது அரசுகளுக்குரியது. அரசுகள் கடைப்பிடிக்கும் ஒன்றை எவ்வாறு அரசற்ற மக்கள் கூட்டமொன்று கைக்கொள்ள முடியும் - அதிலும், ஆகக்குறைந்தது வடக்கு - கிழக்கு தழுவியே தமிழர்கள் ஒரு நிலைப்பாடுடைய மக்கள் கூட்டமாக இல்லை - அவர்களை ஒன்றாகத் திரட்டக் கூடிய ஆற்றலுள்ள தலைமையும் இல்லை. கடந்த 13 வருடங்களில் அவ்வாறனதொரு தலைமைத்துவத்தை எந்தவொரு கட்சியும் நிரூபிக்கவில்லை.

இந்த நிலையில் தமிழர்களுக்கான வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் பேசுவதை எவ்வாறு புரிந்து கொள்ளலாம்? இதனை கனவுலக சஞ்சாரம் என்பதா அல்லது அரசியல் விவகாரங்களை பொறுப்பற்று நோக்குவதன் விளைவென்பதா? ஏனெனில், சர்வதேச அரசியல் தொடர்பில் பேசுவது தமிழ் சூழலில் ஒரு வகையான நாகரிகமாகிவிட்டது.

தமிழரசு கட்சியின் உருவாக்கத்துக்கு பின்னரான கடந்த 74 வருட கால தமிழ் அரசியல் வரலாற்றில் தமிழ் மக்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மக்கள் கூட்டமாக வளர்ச்சியடையவில்லை. தங்களுக்கொரு சர்வதேச முக்கியத்துவம் இருப்பதாக யாழ்ப்பாணத்தின் ஒரு சிறிய குழுவினர் நம்பிக் கொண்ட போதிலும்கூட, தமிழ் மக்களை அவ்வாறானதொரு தகுதி நிலையில் வெளியுலகம் நோக்கவில்லை. அவர்கள் அவ்வாறு நோக்கவில்லை என்பதற்கு முள்ளிவாய்க்கால் அழிவு ஒரு சிறந்த உதாரணமாகும். உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோதுதான், யுத்த வலயத்திற்குள் அகப்பட்ட மக்கள் அழிந்துபோயினர். தமிழ் மக்கள் உலகத்துக்கு தேவையான மக்கள் கூட்டமாக இருந்திருந்தால் ஏன் உலகம் அந்த அழிவை தடுத்து நிறுத்தவில்லை?

உலகம் முள்ளிவாய்க்காலை விடவும் மோசமான அழிவுகளை கண்டிருக்கின்றது. உதாரணமாக ருவாண்டாவில் 8 இலட்சம் மக்கள் நூறு நாட்களில் கொல்லப்பட்டனர். உலகம் அவர்களைக் காப்பாற்றவில்லை. நினைத்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும்? ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களை ஏன் உலகம் காப்பாற்றவில்லை? அப்போது ஐக்கிய நாடுகள் சபையின் ருவாண்டா பணிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த, ஐ. நா. அமைதிப் படையின் தளபதி இவ்வாறு பதிலளித்திருந்தார். “ஒரு சிறிய ஆபிரிக்க நாட்டின் மக்களின் உயிர்கள் உலக மூலோபாய நலன்களுக்கு தேவைப்படவில்லை. இதனால்தான் உலகம் இந்த மக்களை காப்பாற்ற முயற்சிக்கவில்லை”, என்று அவர் கூறினார். இதே நிலைமைதான் தமிழ் மக்களின் நிலைமையும்.

ஆனால், ருவாண்டா மக்களுக்கு இல்லாத சில வாய்ப்புகளும் ஆதரவுத் தளங்களும் ஈழத் தமிழர்களுக்கு இருந்தது. ஈழத் தமிழ் மக்களுக்காக குரல்கொடுப்பதற்கு மேற்குலக நாடுகளில் வாழும் பத்து இலட்சத்துக்கும் மேலான புலம்பெயர் மக்கள் இருந்தனர். மிக அருகில் 7 கோடிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் இருந்தனர். ஆனாலும் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் இறப்பதைத் தடுக்க முடியவில்லை. இது எதனை உணர்த்துகின்றது?

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்கள் மிகவும் பலவீனமான நிலையில்தான் இருக்கின்றனர். இவ்வாறானதொரு மக்கள் கூட்டமொன்று, தங்களுக்கான வெளிவிவகார கொள்கையை உருவாக்க முடியுமென்று வாதிடுவதும் அதனடிப்படையில் இந்தியாவை கையாளலாமென்று கூறுவதும் நகைச்சுவைகளேயன்றி வேறில்லை.

இவ்வாறு கூறுவதன் மூலம் தாங்கள் அறிவுபூர்வமாக சிந்திப்பதாக சிலர் எண்ணிக்கொள்ளலாம் - ஆனால், அவர்கள் தமிழ் மக்களை தொடர்ந்தும் முட்டாளாக்கும் பணிகளையே முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். தமிழர்களுக்கான வெளிவிவகாரக் கொள்கை என்பதெல்லாம் அறிவுபூர்வமான பார்வையல்ல. இவ்வாறு கூறுபவர்கள் முதலில் வடக்கு - கிழக்கின் இன்றைய நிலைமையை உற்றுநோக்கப் பழக வேண்டும். அவ்வாறு நோக்கினால் இது போன்ற கனவுலக கதைகளுக்கான அவசியமிருக்காது. முதலில் இருப்பதைக் கொண்டு மக்களின் இருப்பைப் பலப்படுத்தும் முயற்சிகளில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

# இனவழிப்புக்கு எதிராக கிளிநொச்சியில் இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டம்!

*கிளிநொச்சி, ஏப். 19*

தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் இனவழிப்புக்கு எதிரான அடையாளக் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி சேவைச்சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்னைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க வலியுறுத்தல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதியைப் பெற்றுக் கொடுத்தல், அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்த வலி யுறுத்தல், சமகாலத்தில் இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த அரச திணைக்களங்களால், வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப் பட்ட இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தல், அட்டைப் பண்ணைகள், இறால் பண்ணைகள் அமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களின் கடல்வள அபக ரிப்பைக் கைவிடக் கோரல், சீன நாட்டின் முதலீட்டாளர்களுக்கு கிளிநொச்சியின் காணிகளைத் தாரைவார்ப்பதைத் தடுத்து நிறுத்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வடகடல் நிறுவனம் உருவாக்க நோக்கத்தை எட்டிவிடுவோம்!

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

*யாழ்ப்பாணம், ஏப். 19*

வடகடல் நிறுவனம் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடையக்கூடியதாக உள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

‘நோர்த் சீ’ எனப்படும் வடகடல் நிறுவனத்திற்கான புதிய அலுவலகத்தை நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார். இதன் பின்னர், உரையாற்றிய அவர்,

பொதுவாக பல அரச நிறுவனங்கள் நீண்டகாலமாக நஷ்டத்தில் இயங்குகின்றபடியால் அரசாங்கம் அவற்றை விசேட கண்காணிப்பில் செயல்படுத்துவதற்கு முடிவெடுத்திருக்கிறது. இது உண்மையில் நிறுவனத்துக்கு தலைமை தாங்குபவர்கள் - அவர்களின் அரசியல் பிரதிநிதிகள்தான் அதற்கு பொறுப்புக்கூற வேண்டும். இங்கு இந்த நிறுவனத்தையும் தனியார்மயப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரசாங்கத்தில் முக்கியமான அமைச்சராக இருந்தாலும் அதில் எனக்கு இணக்கப்பாடு கிடையாது. அரசாங்கத்தின் கொள்கைகளையும் பணியாற்றும் ஊழியர்களையும் தனியாரையும் இணைத்து அமைச்சின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

இந்திய அரசாங்கத்தின் கடனுதவிகள் ஊடாக 16 கோடி ரூபாயை கடனாக கேட்டிருக்கிறோம். உதவிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அண்மையில், சீன நிறுவனம் ஒன்றுடன் நடத்திய பேச்சின் போது கடற்றொழிலாளர்களுக்கு 50 கோடி ரூபாயை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர். எனவே, இந்த நிதியுதவிகளைக் கொண்டு, வடகடல் நிறுவனம் எந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ அதனை அடையக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன் - என்றார். (ஐ)

# பிள்ளையார் ஆலய சிலையை பெயர்க்கும் முயற்சி தோல்வி!

*வடமராட்சி ஏப். 19*

பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோயில் ஆலய முன்றலில் உள்ள உண்டியலுடன்கூடிய பிள்ளையார் சிலையை அகற்ற எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த முயற்சி நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றிருக்கலாம் என்று தெரிய வருகின்றது.

நேற்றுக் காலை ஆலயத்தில் வழிபட்டவர்கள் பிள்ளையார் சிலையின் கால் உடைந்த நிலையிலும், சிலையை பெயர்க்க முயற்சி நடந்திருப்பதையும் அவதானித்து நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ-02)





# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 19 புதன்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 06
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : அமாவாசை




**மேடம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வேலையாட்களுடன் விவாதம் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவது நல்லது. அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மிதுனம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். வியாபாரத்தில் சூட்சமங்களை உணருவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம்.

**கன்னி**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். நம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், வீட்டை விரிவுபடுத்துவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வாடிக்கையாளர்களின் ரசனை யைப் புரிந்துக் கொள்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**தனுசு**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உயரும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சொந்த -பந்தங்கள் தேடி வருவார்கள். வரவு உயரும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நேர்மறை எண்ணம் பிறக்கும். அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதிய பாதைதெரியும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

# விஜயின் மக்கள் இயக்கம் விரைவில் கட்சியாக மாறும்?






*சென்னை, ஏப். 19*

''விஜய் மக்கள் இயக்கம் அரசியல் கட்சியாக மாறுமா என்பதை அவரே (விஜய்) விரைவில் அறிவிப்பார்'' என்று அந்த இயக்கத்தின் நிர்வாகி புஸ்ஸி ஆனந்த் கூறினார்.

நடிகர் விஜயின் மக்கள் இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றும் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தவும் அம்பேத்கர், தீரன் சின்னமலை உள்ளிட்ட தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளில் மக்கள் இயக்கம் சார்பில் மரியாதை செலுத்தவும் நடிகர் விஜய் பணித்துள்ளார்.

விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அம்பேத்கர் சிலைக்கு விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகள் மாலையிட்டு மரியாதை செலுத்தினர். சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தீரன் சின்னமலை சிலைக்கு நேற்று மாநில நிர்வாகி புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்ட ரசிகர்கள் மரியாதை செலுத்தினர்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், "விஜய் மக்கள் இயக்கம் அரசியல் கட்சியாக மாறுமா இல்லையா என்பதை விரைவில் அவரே (விஜய்) அறிவிப்பார்'' - என்றார்.

(ஐ)

# கடற்கரையோரம் மீன் விற்கக்கூடாது என்றால் பேனா சின்னம் வைக்கலாமா?

## நாம் தமிழர் சீமான்



*சென்னை, ஏப். 19*

கடற்கரை ஓரத்தில் மீன் விற்கக்கூடாது என்றால், நீங்கள் கடலுக்குள் பேனா சின்னம் மட்டும் வைக்கலாமா என்று சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை கடற்கரை கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரையிலான சாலையில் மீனவர்கள் கடை அமைத்து மீன் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு மீன் வாங்குவோர் வாகனங்களை வீதியில் விடுவதால் ஏற்படும் இடர்களை அடுத்து அந்தக் கடைகளை அகற்றுமாறு சென்னை உயர் நீதிமன்றம், மாநகராட்சிக்கு உத்தரவிட்டது. மீனவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் கடைகள் அகற்றப்படுகின்றன.

இந்த நிலையில் மீனவர்களுக்கு ஆதரவாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் நேரில் சென்று போராட்டத்தில் கலந்துகொண்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்,

நீதியரசர் இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த இடம் மீனவ மக்களின் வாழ்வாதாரம். அந்த வாழ்விடத்தை சிதைக்கும் வகையில் எந்த நடவடிக்கையும் இருக்கக் கூடாது. மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் போராட்டத்தில் ஈடுபடுவது வேதனையாக இருக்கிறது. ஒரு குடைக்கு கீழே தான் மீனவர்கள் கடையை நடத்தி வருகின்றனர். இந்த இடத்தை அகற்றுவதற்கு என்ன அவசியம் வந்தது. கடற்கரையில் மீன் விற்கக்கூடாது என்றால், கடலுக்குள் பேனா சின்னம் மட்டும் வைக்கலாமா? இதற்கு உங்களிடம் பதில் இருக்கிறதா?. கடற்கரை ஓரத்தில் மீன் சந்தை போட்டு விற்கக்கூடாது என்றால், கடற்கரையில் சமாதி மட்டும் கட்டி எல்லோரையும் புதைக்கலாமா? இது ஏற்புடையதா என்று கேள்வி எழுப்பினார்.

இந்த மீனவர்களின் பிரச்சனைக்கு நியாயமான தீர்ப்பு கிடைக்காவிட்டால் நான் வழக்கு போடுவேன். இல்லையென்றால் மக்களை ஒருங்கிணைத்து போராட்டம் வெடிக்கும் - என்றார்.

(ஐ)

# கர்நாடக தேர்தலில் போட்டி; முடிவு எடுக்கப்படவில்லை!

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

*சென்னை, ஏப். 19*

இரட்டை இலை தொடர்பான வழக்கு நிலுவையில் இருப்பதால் கர்நாடக தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக முடிவு எடுக்கப்படவில்லை என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப் பாடி பழனி சாமி தெரிவித்துள்ளார்.




சென்னையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அ. தி. மு. கவின் மதுரை மாநாடு பாராளுமன்றத் தேர்தலுக்கு நிச்சயம் ஒரு திருப்பு முனையாக அமையும். இந்தியாவில் உள்ள அனைத்துத் தலைவர்களும் மதுரையை நோக்கிப் பார்க்கும் அளவுக்கு பிரமாண்ட மாநாடாக இருக்கும் - என்றார்.

அத்துடன், தேர்தல் ஆணையத்தில் சின்னம் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது. கர்நாடக தேர்தலுக்கு முன்பு சின்னம் கிடைக்கப் பெற்றால், அ. தி. மு. க. போட்டியிடுவது குறித்து முடிவெடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

# எப்போது சலிப்பு ஏற்படுகிறதோ அப்போதே பதவி விலகிவிடுவேன்!

## தமிழ்நாடு ஆளுநர் ரவி



*இராமநாதபுரம், ஏப். 19*

"நான் வகிக்கும் பதவியில் எப்போது சலிப்பு ஏற்படுதோ, அப்போது நான் பதவி விலகுவேன்", என்று தமிழக ஆளுநர் ரவி கூறியுள்ளார்.

இரு நாள் பயமாக இராமநாதபுரம் சென்றுள்ள அவர் அங்கு நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "இந்தியா வின் பிரகாசமான மகன்களில் ஒருவரும், உத்வேகம் தரும் தலைவருமான அப்துல்கலாம், ஒரு சாதாரண குடும்ப பின்னணியில் இருந்து வந்து, தன் கனவை நம்பி கடுமையாக உழைத்ததால், ஈடு இணையற்ற சாதனைகளைப் படைத்தார் - என்றும் கூறினார்.

(ஐ)




## மன்னார் வலயப் பாடசாலைகளில் திறன்வகுப்பறைகள் திறந்துவைப்பு

மன்னார், ஏப். 19

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட பத்து கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் இம்மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டன.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கமைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பும் இரட்ணம் பவுண்டேசன் அமைப்பும் இணைந்து பன்னிரண்டு பாடசாலைகளுக்கு திறன் பலகைகளை வழங்கியது மட்டுமன்றி இப்பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு , திறன்பலகைகளைக் கையாள்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வளவாளர்களைக்கொண்டு பயிற்சிகளையும் வழங்கியிருந்தது.

இத்திறப்பு விழாக்கள் கொக்குபடையான், சவேரியார்புரம், நொச்சிக்குளம், சிறுக்கண்டல், அகத்திமுறிப்பு, முருங்கன், புதுக்கமம், சாந்தபுரம் மற்றும் சிறுத்தோப்பு கிராமப்புறங்களில் பாடசாலைரீதியாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் மட்டுமன்றி அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் சிறப்பாக நடந்தேறியது .

இத்திறப்பு விழாக்களில் ஏற்கெனவே பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளும் இடம்பெற்றிருந்தன.

ஆசிரியர்களுக்கான தொடருறு பயிற்சிகளை வலயத்திற்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்களை கொண்டு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் மாதாந்த அறிக்கைகளை தமக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் வலயக்கல்விப் பணிப்பாளர் அதிபர்களை கோரினார். (அ)

# சுகாதாரத்துறை பாரிய சிக்கலில்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

கொழும்பு, ஏப். 19

**மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் மருந்து வகைகளின் விலையேற்றத்துக்கு உடனடியாக தீர்வு ஒன்று வழங்கப்படவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹரித அலுத்கே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக வரலாற்றில் எந்தவொரு காலத்திலும் முகம் கொடுக்காத நெருக்கடிகளுக்கு சுகாதாரத்துறை முகம் கொடுத்திருந்தது. ஒரு பக்கம் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இன்னொரு பக்கம் மருந்து பொருட்களுக்கான விலை ஏற்றம் ஆகிய பிரச்னைகளுடனேயே நாம் பழைய வருடத்தை பூர்த்தி செய்தோம்.

இதேவேளை, நாட்டில் மந்த போசனை வீதமும் அதிகரித்துள்ளது. இதற்கிடையில் மருத்துவமனை கட்டமைப்புகளிலும் பாரிய அளவு வீழ்ச்சியை சந்திக்க நேரிட்டுள்ளது. குறிப்பாக பல வைத்தியர்கள் இன்று நாட்டைவிட்டு வெளி நாடுகளுக்கு செல்கின்றனர்.

எவ்வாறாயினும் புதிய வருடத்தில் எமக்கு புதிய எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன. எனவே இந்த புதிய வருடத்திலாவது குறித்த பிரச்னைகள் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

## புதிய பயங்கரவாத சட்டம் குறித்து பலருக்கு சரியான புரிதல் இல்லை

### சுட்டிக்காட்டுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஏப். 19

"புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் புரிதல் இல்லாதவர்களே அதனை எதிர்க்கின்றனர். " - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத ஒழிப்பு சட்ட மூலம் 1979ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனுடன் ஒப்பிடுகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. புதிய சட்ட மூலத்தில் பல தளர்வுகள் செய்யப்பட்டுள்ளன.

தடுப்புக்காவலில் வைப்பதற்கான அதிகாரம் இதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் மாத்திரமே காணப்பட்டது. எனினும் புதிய சட்ட மூலத்தின் ஊடாக அந்த அதிகாரம் பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும் ,



நீதவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பிரதி பொலிஸ்மா அதிபர்கள் , நீதவான் நீதிமன்ற நீதிபதிகள் மீது நம்பிக்கை அற்றவர்களே இதனை எதிர்க்கின்றனர்.

அவ்வாறெனில் அவர்கள் ஜனாதிபதியிடம் மாத்திரம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமையை விரும்புகின்றனரா? ஜனாதிபதியின் மீது மாத்திரமே தமக்கு நம்பிக்கை இருப்பதாகக் கூறுபவர்கள் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அதனை குறிப்பிட வேண்டும்-என்றார். (அ)

## அரச எதிர்ப்பாளரை வேட்டையாடவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்!

### சன்ன ஜயசுமண குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 19

"அரச எதிர்ப்பாளர்களுக்கு 'பயங்கரவாதிகள்' முத்திரையைக் குத்தி அவர்களை வேட்டையாடுவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது. இச் சட்டமானது ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகும்."

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

"மேற்படி சட்டமூலத்தை ஆராய்ந்த பின்னர், ஒரு விடயம் தெளிவாகின்றது. அதாவது இது பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அல்ல. மாறாக அரசை எதிர்ப்பவர்களை ஒடுக்குவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள சட்டமூலமாகும்.

பயங்கரவாதிகளையும், அரச எதிர்ப்பாளர்களையும் ஒன்றாக காண்பித்து, அனைத்து அரச எதிர்ப்பாளர்களையும் ஒடுக்குவதற்கான திட்டமே இது. ஜே. ஆர். ஜெயவர்த்தன அன்று செய்ததையே இவர்கள் இன்று செய்கின்றனர். புதிய சட்டமூலத்தை எமது சுதந்திர மக்கள் சபை எதிர்க்கும்.

அதேவேளை, அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தினால்கூட கைது செய்யப்படலாம். தடுப்பு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் இச்சட்டமூலத்தின் பிரகாரம் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படுகின்றது. இது நகைப்புக்குரிய விடயமாகும்.

இச்சட்டமூலம் நிறைவேறினால் முழு நாடும், தொடர்ந்து அவசரகால சட்டத்தின்கீழ் இருப்பதுபோல்தான் இருக்கும்."-எனவும் சன்ன ஜயசுமண குறிப்பிட்டார். (அ)

## தாலிக்கொடி செய்து தருவதாகக் கூறி பணத்துடன் தலைமறைவானவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 19

தாலிக்கொடி செய்து தருவதாக கூறி 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் பணத்துடன் தலைமறைவான நபர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திருமணத்துக்கு தாலி செய்து தருவதற்காக குறித்த நபரிடம் ஒரு தொகை நகை மற்றும் பணம் என்பவற்றை மணமகன் வீட்டார் வழங்கியுள்ளனர். அவற்றின் பெறுமதி 12 இலட்சம் ரூபாய் என தெரிவிக்கப்படுகின்றது.

நகை மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்டவர் திருமணத்துக்கு முதல் நாள் தாலியைத் தருவதாக உறுதி அளித்துள்ளார்.

அதன் அடிப்படையில், திருமணத்துக்கு முதல் நாள் தாலியை வாங்கச் சென்ற போது, அவரது கடை மூடப்பட்டு இருந்தது.

அவருக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டபோது, தொலைபேசி துண்டிக்கப்பட்டு இருந்தது.

அதனை அடுத்து மணமகன் வீட்டார், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து இருந்த நிலையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.(அ)

## சீன அபிவிருத்தி நிறுவன பிரதிநிதியுடன் அமைச்சர் பந்துல குணவர்த்தன சந்திப்பு

கொழும்பு, ஏப். 19

சீன சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதித் தலைவர் டென் பொசின் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோருக்கு இடையில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு அனைத்து நட்பு நாடுகள் மற்றும் சீனா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் ஆலோசனைகள், உதவிகள் மற்றும் ஆதரவை இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் சீனப் பிரதிநிதிகளிடம் கூறினார்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட சீனாவின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் பிரதித் தலைவர் டென் பொசின், இலங்கை மிகவும் நட்பு நாடு என்ற வகையில், இலங்கைக்கு தேவையான ஆதரவை சீனா தொடர்ந்து வழங்கும் எனத் தெரிவித்தார்.

சீன சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகமையின் பிரதிநிதியாக இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென்ஹோங் மற்றும் அதன் பொருளாதார மற்றும் வர்த்தக ஆலோசகர்கள் உட்பட இராஜதந்திர அதிகாரிகள் குழுவும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (அ)

# எந்தத் தேர்தல் நடத்தாலும் அரசு படுதோல்வி அடையும்

## அடித்து கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஏப். 19

2024 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்ய அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும் அரசாங்கம் படுதோல்வி அடையும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டில் ஸ்திரமான அரசாங்கம் ஒன்று கிடையாது. தேர்தல் ஒன்று இடம்பெற்றால் அரசாங்கம் படுதோல்வி அடைவது உறுதி என்பதால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.



நாட்டு மக்களின் தேர்தல் உரிமையை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க ஆணைக்குழு பொறுப்புடன் செயற்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியான நிலையில் உள்ளது. தேர்தல் இல்லையென்றால் தேர்தல்கள் ஆணைக்குழு அவசியமற்றது.

உரிய காலத்தில் இடம்பெறவேண்டிய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட்டு 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் இடம்பெறவேண்டிய ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தற்போது ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார். அரசாங்கமும் அதற்கு சார்பாகச் செயற்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியவுடன் ஏற்பட்ட வெற்றிடத்துக்காகவே இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். ஐந்தாண்டு பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடையாது. ஏனெனில் அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் அல்லர்.

2024 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்ய அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. நாட்டு மக்கள் தெளிவாக உள்ளார்கள். தேர்தல் ஒன்று இடம்பெற்றால் பாரம்பரியமான அரசியல் கலாசாரத்தை முழுமையாக மாற்றியமைப்பார்கள்-என்றார். (அ)

# வவுனியாவில் 22,948 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை!

வவுனியா, ஏப். 19

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் 22,948.68 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை இடம்பெற்று வருகின்றது.

கடந்த 2022ஆம் வருடம் 12 ஆயிரத்து 238 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குளங்களில் உள்ள நீரின் அளவு மற்றும் புதிதாக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான காணிகளை விவசாயிகள் தயார்ப்படுத்தியமை போன்ற காரணங்களால் வவுனியா மாவட்டத்தில் இம்முறை அதிகளவிலான ஏக்கரில் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, சிறுபோக நெற்செய்கைக்கான பசளை வழங்குவதற்குரிய நடவடிக்கையை அப்பகுதிக்குரிய கமநல சேவைத் திணைக்களங்களின் ஊடாக அரசு முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 4 நிறுவனங்களுக்கு கோப் குழு அழைப்பு

கொழும்பு, ஏப். 19

அடுத்த வாரத்தில் கோப் குழு முன்னிலையில் ஆஜராகுமாறு 04 அரச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காணி சீர்திருத்த ஆணைக்குழு, தொழிற்பயிற்சி அதிகார சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளிட்ட 04 நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்காத 19 அரச நிறுவனங்களை கோப் குழுவிற்கு அழைக்கவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி. சி. விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

நிதி நிலை அறிக்கை வழங்கப்படாமைக்கான காரணம் குறித்து இதன்போது ஆராயப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்காக அரசமைப்பு, சட்ட ரீதியில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு முழுமையான ஆதரவு

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 19

தீர்க்கமான எந்தவொரு தேர்தலுக்கும் நாம் தயாராகவே உள்ளோம். எனவே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பு ரீதியில் அல்லது சட்ட ரீதியில் ஏதேனும் இடையூறுகள் காணப்படுமாயின் அவற்றில் மாற்றங்கள் அல்லது திருத்தங்களை மேற்கொள்வதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு அரசாங்கம் தயார் எனில், ஐக்கிய மக்கள் சக்தியும் அதற்கு தயாராகவே உள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட ஐக்கிய மக்கள் சக்தியில் அனைவரும் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவையாகும். இது அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள செய்தியாகும். அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்பதற்கான எந்தவொரு நிலைப்பாடும் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இல்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

எம்மிலிருந்து 20 - 30 பேர் அரசாங்கத்துடன் இணையவிருப்பதாக தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வந்தாலும், இதுவரை ஒருவர்கூட அவ்வாறு செய்யவில்லை. மக்கள் மத்தியில் விருப்பைப் பெற்றுக் கொள்ள முடியாத அரசாங்கம் பாராளுமன்றத்திற்குள் என்ன செய்ய காத்திருக்கின்றது? அரசாங்கம் எதிர்கொள்ளும் பின்னடைவை சமநிலைப் படுத்துவதற்காக அவர்கள் எதிர்க்கட்சிகளுடன் பேரம் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

மக்கள் ஆணையற்ற அரசாங்கத்துடன் எவரும் இணைய விரும்புவார்களெனில் அவர்களின் மூளையைப் பரிசோதிக்க வேண்டும். அவ்வாறு எவரும் எமக்குள் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியில் அனைவரும் இணைந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை மேலும் பலப்படுத்துவோம். இந்த அரசாங்கத்துடன் இணைவது தற்கொலை செய்து கொள்வதைப் போன்றதாகும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தொடர்ந்தும் காலம் தாழ்த்துவதற்கு எந்தவொரு சட்ட ஏற்பாடும் இல்லை. அவ்வாறிருக்கையில் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ளமை மக்களின் ஜனநாயகத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள பாரிய தாக்குதலாகும். தற்போது தேர்தல் ஆணைக்குழுவும் செயழிலந்துள்ளது. அரசியலமைப்பை மீறிச் செயற்படும் ஒவ்வொருவரும் எதிர்காலத்தில் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு அரசாங்கம் தயாராகிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நாமும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என்றால் அரசியலமைப்பு ரீதியில் ஜனாதிபதிக்கு ஏதேனும் இடையூறுகள் காணப்பட்டால் அவை குறித்து கலந்துரையாடி தீர்வு காண்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்-என்றார். (அ)

# சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரை செயல்பாடுகள் அடுத்த வாரம் முதல்!

கொழும்பு, ஏப். 19

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரை செயல்பாடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

ஏனைய பல்கலைக்கழகங்களின் விரிவுரை செயற்பாடுகள் நேற்று ஆரம்பமாகின.

எனினும், தங்களது பல்கலைக்கழகத்தின் விரிவுரைகள் மாத்திரம் ஒரு வாரத்தின் பின்னர் ஆரம்பிக்கப்படும் என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில் விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப்பணிகளில் பங்கேற்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ)

# இந்த மாதம் முதல் வாரத்தில் 32,495 சுற்றுலாவிகள் நாட்டுக்கு!

கொழும்பு, ஏப். 19

இந்த மாத முதல்வாரத்தில் 32,495 சுற்றுலா பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் இந்தியாவில் இருந்து பிரவேசித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுதவிர, ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மன் மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்.

இதன்படி, இந்த ஆண்டில் நாட்டை வந்தடைந்துள்ள மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து 68 ஆயிரத்து 174 பேர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# அரைச்சொகுசு பஸ் சேவை அடுத்த மாதத்துடன் இரத்து

கொழும்பு, ஏப். 19

அரைச் சொகுசு பஸ் சேவைகள் அடுத்த மாதத்துடன் இரத்துச் செய்யப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரைச் சொகுசு பஸ்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரெண்டா குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த நடைமுறையை அமுல்படுத்துவது தொடர்பில் சந்தேகம் இருப்பதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)

# கட்டுப்பாட்டு விலையின் கீழ் முட்டைகளை விற்க தீர்மானம்!

கொழும்பு, ஏப். 19

எதிர்வரும் முதலாம் திகதி முதல் கட்டுப்பாட்டு விலையின் கீழ் முட்டைகளை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இதன் விலை மேலும் குறையலாம் எனவும், இதற்கமைய டிசெம்பர் மாதத்திற்குள் முட்டையை 25 முதல் 30 ரூபாய் வரையில் கொள்வனவு செய்ய முடியும் எனவும் அதன் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த 700 விற்பனையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# தமிழரின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளியுங்கள்!

## அனைத்துக் கடன் வழங்குநர்கள், நாணய நிதியம் ஆகிவற்றிடம் உலக தமிழர் அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 19

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பிற்குப் பிறகு இலங்கை கலாசார இனப்படு கொலையை அதிகரித்துள்ள நிலையில், தமிழர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமையளிக்குமாறு இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களையும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிடத்திலும், உலக தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம் கோரியுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான கலாசார, இனப்படுகொலையை இலங்கை திட்டமிட்டு விரிவுபடுத்துவது குறித்து தமிழ் புலம் பெயர்ந்தோர் தீவிரமான அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்கள், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பன, நிதியுதவிக்கு அப்பால், பூர்வீக மக்களின் நில உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று கனடாவை மையப்படுத்தும் உலக தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம் கோரியுள்ளது.

“தமிழர்கள் விரும்பத்தகாதவர்கள் என்று கருதுவதன் மூலம், இலங்கை அரசாங்கங்கள், 40 ஆண்டுகளாக தமிழ் முதலீடுகள், தொழில்முனைவு மற்றும் திறமைகளை வேறு இடங்களில் செலுத்தியுள்ளது.

இதன் பிரதிபலனே அந்த நாட்டின் தொடர்ச்சியான அரசியல் ஸ்திரமின்மைக்கு ஆணிவேராகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்புக்குப் பின்னர், இலங்கை அரசாங்கத்தின் தொல்பொருள் திணைக்களம் தமிழீழத்தின் எல்லைப் பகுதியில் உள்ள தமிழர் பாரம்பரிய இடங்களை குறிவைத்து அழித்து வருகிறது.

பண்பாட்டு இனப்படுகொலை என்பது தமிழர்களை அழிக்கும் இலங்கையின் நோக்கத்தின் ஒரு பகுதியாகும்.

மேலும் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய தமிழ் நூலகத்தை 1981 இல் இலங்கை அரசாங்கம் எரித்தது.

மூன்று தசாப்தங்களுக்கு எதிரான போரின் போது தேவாலயங்கள் மற்றும் கோவில்கள் மீது வான்வழி குண்டுவீச்சுக்கு இலங்கை அரசாங்கம் நன்கு அறியப்பட்டதாகும்.

இந்தநிலையில் 2023ஆம் ஆண்டில், சர்வதேச நாணய நிதியப்பிணை எடுப்புக்கு பின்னர், தமிழ் பாரம்பரிய தளங்களை அழிக்கும் போக்கு அதிகரித்துள்ளது.

தமிழர்கள் மீதான போருக்கு நிதியளித்தமை மற்றும் தமிழ்ப் பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்காக நேரடியாக கடன் வாங்கியதில் இருந்தே இலங்கையில் கடன் பிரச்னைகள் ஏற்பட்டன.

எனவே, அரச அதிகாரிகள், இராணுவத் தளபதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் செய்த குற்றங்களுக்கு சர்வதேச நீதிக்கு வழி வகுக்கும் வகையில், ரோம் சாசனத்தை, பொருளாதார உதவியுடன் இணைக்குமாறு புலம் பெயர்ந்த தமிழர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியிருந்தன.

எனினும் சர்வதேச நாணய நிதியம், மனித உரிமைகளை பரிசீலனை செய்யாமல், இலங்கையின் பிணையெடுப்புக்கு உதவியளித்துள்ளது.

இதன் விளைவாகவே இலங்கை அரசு கலாசார இனப்படுகொலையின் ஒரு பகுதியாக தமிழர் பாரம்பரிய தளங்களை அழித்து வருகிறது” என்று உலக தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மக்களை அடிப்படையாக கொண்டது

## அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ விளக்கம்

கொழும்பு, ஏப். 19

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மக்களை அடிப்படையாக கொண்டது முற்போக்கானது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் பல முன்னணி சட்டத்தரணிகளின் ஆலோசனைகளை உள்வாங்கிப் பொது மக்களை பாதுகாப்பதற்காக இதனை உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

உலகின் ஏனைய நாடுகளில் காணப்படும் சட்டங்களை அடிப்படையாகவைத்து உத்தேச பயங்கரவாத தடைச்சட்டங்களை உருவாக்கியுள்ளதாகவும் நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பலவற்றை உத்தேச சட்டம் நீக்குகின்றது எனவும் அவர் கூறினார்.

பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளே உத்தேச சட்டத்தில் காணப்படுகின்றன.



எதிர்கால அரசாங்கங்களை வலுப்படுத்தும் நோக்கத்தில் எந்த ஏற்பாடுகளும் உத்தேச சட்டத்தில் இல்லை எனவும் விஜயதாஸ சுட்டிக்காட்டினார்.

(அ)

# 3 வாகனங்கள் மோதி விபத்து; மூன்றரை வயது குழந்தை பலி!

கொழும்பு, ஏப். 19

கொடகம சந்தியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மூன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் ஓட்டோவில் பயணித்த குழந்தையின் தாய், தந்தை மற்றும் சகோதரர் காயமடைந்த நிலையில் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுகேகொடையில் இருந்து மதுலவ பிரதேசத்தில் உள்ள வீட்டுக்கு சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# தப்புல டி லிவேராவுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு

கொழும்பு, ஏப். 19

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை இன்று புதன்கிழமை பயங்கரவாத விசாரணைப் பிரிவில் (சி.ஐ.டி) முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இடம்பெற்ற சதித்திட்டம் குறித்த அவரது சர்ச்சைக்குரிய அறிக்கை தொடர்பான தகவல்களைப் பதிவு செய்வதற்காகவே பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

(அ)

# மின்சார சபை மறுசீரமைப்பு; அனுமதியளித்த அமைச்சரவை



கொழும்பு, ஏப். 19

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு செயல்முறையின் முன்மொழியப்பட்ட வரைபடத்துக்கும் கால அட்டவணைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதன்படி, மே மாத இறுதிக்குள் புதிய மின்சார சட்டத்தின் இறுதி வரைவு பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என மேலும் கூறினார்.

மேலும், மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒருங்கிணைப்பு பணியகத்தை நிறுவுவதற்கும், செயல்முறை மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி, யு.எஸ். எயிட் மற்றும் ஜெய்கா போன்ற மேம்பாட்டு நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(அ)

## பண்ணை அம்மன் சிலை விவகாரம்

# அகற்றுமாறு முறையிட்டவர் விரைவில் வெளியேறுவார்

## விக்கினேஸ்வரன் எம்.பி. கருத்து

யாழ்ப்பாணம், ஏப். 19

பண்ணை நாகபூசணிக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்தவர் எவ்வளவு காலம் யாழ்ப்பாணத்தில் இருப்பாரோ தெரியவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பண்ணையில் அமைந்துள்ள நாகபூசனி அம்மன், உரிய அனுமதிகள் பெறாது அமைக்கப்பட்டதாக தெரிவித்து ஒருவர் முறைப்பாடு வழங்கியதாக அறிகிறேன்.

அவரது முறைப்பாட்டை பொலிஸார் ஏற்றது பிரச்னை இல்லை. யாழ்.மாவட்டத்தில் உரிய முறையில் அனுமதி பெற்றா வழிபாட்டு இடங்கள் அமைக்கப்படுகின்றன என்பதை பொலிஸாரிடம் கேட்க விரும்புகிறேன்.

சட்டம் யாவருக்கும் சமன், சட்டத்தை உரிய முறையில் பொலிஸார் நடைமுறைப்படுத்த வேண்டும்.

முறைப்பாடு வழங்கியவர் யார் என்பது இதுவரை வெளிவராத நிலையில் பெரும்பாலும் முறைப்பாட்டை வழங்கியவர் யாழ்ப்பாணத்தை விட்டு விரைவில் வெளியேறுவார் போல தெரிகிறது-என்றார்.

(அ)

# குணமடைந்து வீடு செல்லாதவர்களினால் கொழும்பு வைத்தியசாலையில் நெருக்கடி

கொழும்பு, ஏப். 19

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பாதுகாவலர்கள் இன்றி அதிகளவான நோயாளர்கள் தங்கியிருப்பதால், நாளாந்த வைத்தியசாலை நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

தினமும் சுமார் ஐந்து பேர் குணமடைந்து வைத்தியசாலையில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மருத்துவமனை நிர்வாகத்தால் மேலதிக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரதி பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லென தெரிவித்தார்.

நோயாளர் காவு வண்டியின் ஊடாக பலர் சிகிச்சைகளுக்காக அழைத்து வரப்படுகின்றனர்.

அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்திருப்பினும், பொறுப்பேற்க எவரும் வருவதில்லை.

அவர்களில் பெரும்பாலானோர் வயோதிபர்களாவர். குணமடைந்த சிலருக்கு வீடு செல்வதற்கான வழி தெரியவில்லை.

அவ்வாறு வைத்தியசாலையில் உறவினர்கள் எவரேனும் தங்கியிருப்பின் அவர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க வேண்டியது மருத்துவமனையின் பொறுப்பாகும்.

குணமடைந்ததன் பின்னர் அது தொடர்பான பொறுப்புக்கூறலை ஏற்கவேண்டியது சமூக பாதுகாப்பு அமைச்சுக்குரியதாகும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லென குறிப்பிட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை உட்பட மேலும் பல முக்கிய வைத்தியசாலைகளிலும் இந்த நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# போராட்டங்களுக்கான தார்மீக நியாய அடிப்படை தொடரப்போகிறது



கலாநிதி ஜெகான் பெரேரா



© Parliament of Sri Lanka

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை (**Anti – Terrorism Bill**) ஏப்ரில் 25 பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அரசாங்கத்துக்கு இருக்கும் பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்தி வாக்கெடுப்பொன்றை நடத்தி விரைந்து அதை நிறைவேற்றுவதை தாமதிப்பதற்கு மேற்கொள்ளப் பட்டிருப்பதாக கூறப்படும் தீர்மானம் வரவேற்கப்படவேண்டியதாகும். தற்போதைய வடிவில் சட்டமூலம் ஜனநாயக பரப்பு மீதும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதும் தாக்கத்தை செலுத்தும் என்பதால் அதை சபையில் சமர்ப்பிப்பது குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும்.

எந்தவொரு சட்ட மறுசீரமைப்பிலும் அடிப்படை உரிமைகளும் குடிமக்களின் பாதுகாப்பும் உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும். அரசியலமைப்பின் பிரகாரம் மக்களின் அதிகாரம் அவர்களின் பயனுக்காகவே அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. இந்த இரு குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்கு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தவறுகிறது. அரசாங்கம் எந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கு உத்தேசித்திருக்கிறதோ அதே சட்டத்தையும் விட மோசமான அம்சங்களை தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் வரைவு கொண்டிருக்கிறது.

பதீலீட்டு சட்டமூலத்தை வரைந்தவர்களின் மனப்போக்கில் எந்த மாற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை. இது துரதிர்ஷ்டவசமானது. பதிலாக பயங்கரவாத காரணங்களை காட்டி அரசியல் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு விரும்புகின்ற மனோபாவத்தின் வெளிப்பாடுகளையே காணக்கூடியதாக இருக்கிறது. உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் படுமோசமான அம்சங்களில் ஒன்று பயங்கரவாதத்திற்கு அது கொடுக்கின்ற தெளிவற்றதும் விசாலமானதுமான வியாக்கியானமாகும்.

அரசாங்க சொத்துக்களையும் தனியார் சொத்துக்களையும் கூட திருடுவதையும் தொழிற்சங்க நடவடிக்கையையும் அது பயங்கரவாதம் என்கிறது. எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டங்களை நடத்துவது,பிரசுரங்களை வெளியிடுவது, அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கோருவது, வேலைநிறுத்தங்கள் மற்றும் இன, மத தலங்களுடன் சம்பந்தப்பட்ட தகராறுகள் உட்பட நியாய பூர்வமான நடவடிக்கைகளை சட்டமூலம் பயங்கரவாத வீச்செல்லைக்குள் கொண்டுவருகிறது. மேற்குறிப்பிடப்பட்ட செயல்களில் ஈடுபடுவதாக தாங்கள் “நியாயமாக சந்தேகிக்கும்” எந்தவொரு நபரையும் பொலிசார் அல்லது இராணுவத்தினர் அல்லது கரையோரக் காவல்படையினர் பிடியாணையின்றி கைதுசெய்வதற்கு சட்டமூலம் அனுமதிக்கிறது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்றுவது தொடர்பில் எதிர்மாறான இரு கருத்துக்கள் இருக்கின்றன. சட்டமூலம் மீது ஏப்ரில் 25 பாராளுமன்ற விவாதம் நடத்தப்படக்கூடும் என்று அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் கூறுகிறார்கள். அதேவேளை வேறு சிலர் அவ்வாறு விவாதம் நடைபெறக்கூடிய சாத்தியமில்லை ஏனென்றால் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் வெளிக்காட்டப்பட்டு வரும் எதிர்ப்பு மற்றும் நெருக்குதல் காரணமாக இந்த விவகாரத்தை ஒத்திப்போடுவதற்கு அரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்திருக்கிறது என்று கூறுகிறார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் மோசமான துஷ்பிரயோகங்களுக்கு காரணமாக இருந்து வருவதால் அதற்கு பதிலாக சர்வதேச நியமங்களுக்கு ஏற்றமுறையில் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இழக்கவேண்டிய ஆபத்துவரும் என்று இலங்கை அரசாங்கங்கள் மீது இடையறாது நெருக்குதல்கள் பிரயோகிக்கப்பட்டு வந்ததன் காரணத்தினாலேயே இந்த செயன்முறையில் தற்போதைய அரசாங்கம் இறங்கியது. ஆனால் நடைமுறையில் இருக்கும் சட்டத்தைவிடவும் கூடுதல் சர்ச்சைக்குரியதாக புதிய சட்டமூலம் இருக்கிறது.

**போராட்டங்களை ஒடுக்குதல்**

பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாக துஷ்பிரயோகம் செய்திருப்பது குறித்து கடுமையான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. மனித உரிமைகள் அமைப்புக்களினாலும் வெளிநாட்டு அரசாங்கங்களினால் இது உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. அதன் காரணத்தினால்தான், பயங்கரவாதப் பிரச்சினையை கையாளுவதற்கு குறுகிய அளவில் வரையறை செய்யப்பட்ட சட்டத்தில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை செய்யும் நிலை ஏற்பட்டது.

வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்து தங்களை அபிவிருத்தி செய்வதில் அக்கறை கொண்டு செயற்படுகின்ற அதேவேளை மக்களை ஒடுக்குவதை விடுத்து அவர்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதில் நாட்டம் கொண்ட நாடுகளுக்கே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கப்படுகிறது. தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஏற்கெனவே கிடைக்கப்பெறுகின்ற பொருளாதார உதவிகளை இழப்பதையும் பொருளாதார தடைகளுக்கு உள்ளாவதையும் அரசாங்கத்தினால் நினைத்துப்பார்க்கவே முடியாது.

பயங்கரவாதம் என்று கருதப்படக்கூடியதாக பெருவாரியான நடவடிக்கைகளை அதன் வீச்செல்லைக்குள் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொண்டு வருகிறது. இதுவே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், துறைசார் நிபுணர்கள் சங்கங்களின் அமைப்பு உட்பட உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் மிகவும் கடுமையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கும் முக்கியமான அம்சமாகும். தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய தொழிற்சங்க நடவடிக்கைகளும் இதில் உள்ளடக்கப்படுகிறது.

அதன் காரணத்தினால்தான் நாட்டின் மீதான பயங்கர தாக்குதல்களின் வடிவில் வரக்கூடிய பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதை விடவும் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கின்ற முயற்சிகளுக்கு எதிராக இடம் பெறுகின்ற போராட்டங்களை கட்டுப்படுத்துவதே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் உண்மையான நோக்கம் என்ற பரவலான ஏகோபித்த அபிப்பிராயம் ஆய்வாளர்கள் மற்றும் கல்விமான்கள் மத்தியில் காணப்படுகிறது.

ஒரு வருடத்துக்கு முன்னர் மக்கள் வீதிகளில் இறங்கி முன்னெடுத்த போராட்ட காலப்பகுதிக்கும் தற்போதைய நிலைவரத்துக்கும் இடையில் உள்ள வேறபாடு சட்டம் ஒழுங்குத் தோற்றப்பாடேயாகும். ஒரு வருடத்துக்கு முன்னர் நிலவிய கடுமையான தட்டுப்பாடுகளுடன் ஒப்பிடும் போது இப்போது அனேகமாக சகல பாவனைப் பொருட்களையும் பெறக்கூடியதாக இருக்கிறது. போராட்டங்கள் முதலில் விவசாயிகளுக்கு தேவையான பசளை வகைகளின் தட்டுப்பாட்டில் இருந்தே தொடங்கின. பிறகு எரிபொருள், சமையல் எரிவாயு, உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துவகைகளின் தட்டுப்பாடு, மின்வெட்டு ஆகியவற்றை அடுத்து போராட்டங்கள் தீவிரமடைந்தன. டொலர் தட்டுப்பாடு தட்டுப்பாடுகள் எல்லாவற்றை விடவும் பெரியதாக இருந்தது.

இந்த தட்டுப்பாடுகளே பெரும் குழப்பநிலைக்கு வழிவகுத்தது. தங்களது வாழ்க்கைத்தரங்களில் முற்றிலும் எதிர்பாராத வீழ்ச்சியை கண்ட மக்கள் கொதித்தெழுந்து பல்லாயிரக்கணக்கில் வீதிகளில் இறங்கினார்கள். வசதியாக வாழ்ந்த நடுத்தர வர்க்கத்தினரும் உழைக்கும் வர்க்கத்தினரும் பெரும் இடர்பாட்டுக்குள் தள்ளப்பட்டனர். 70 சதவீதமான குடும்பங்கள் தங்களது அன்றாட உணவின் அளவைக் குறைத்துக்கொண்டன. நாட்டு சனத்தொகையில் கால் பங்கிற்கும் அதிகமானோர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வீழ்ந்தனர்.

**நியாய அடிப்படை**

நாடு வறுமைப்பட்டதற்கு பொறுப்பானவர்களும் பொருளாதாரத்தை சூறையாடி வெளிநாடுகளில் பணத்தை பதுக்கிவைத்திருப்பவர்களும் பொறுப்புக்கூற வைக்கப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் என்பதே மக்களின் நியாயபூர்வமான கோரிக்கையாகும். பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு எந்தவொரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கமும் மக்களின் அந்த கோரிக்கையை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது.

தங்களது கூட்டு எதிர்காலத்தை நம்பிக்கையளித்த மக்கள் அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் செயற்படும் போது அதற்கு எதிராக போராடுவதற்கான தார்மிக உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஒரு வருடமாக போராட்ட இயக்கத்தையும் மக்களின் எதிர்ப்பையும் ஒடுக்குவதற்கு பாதுகாப்பு படைகளை பயன்படுத்திய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் பொருளாதார மீட்சிக்கான செயன்முறைகளில் இறங்கியிருக்கிறது. இந்த செயன்முறைகளின் விளைவாக பொருட்கள் விலை அதிகரிப்பு மற்றும் சமூக நலன்புரி சேவைகளில் குறைப்பு சனத்தொகையின் வறிய பிரிவினர் மீதே சுமைகளை ஏற்றியிருக்கின்றன.

ஜனநாயக முறைமை என்பது மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்திய சமூக உடன்பாட்டு கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த கோட்பாடுகளின் பிரகாரம் தங்களுக்கான உரிமைகளையும் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதாக உறுதியளிக்கும் அரசாங்கத்துக்கு மக்கள் தங்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்கிறார்கள். ஆனால் இலங்கை பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில் அரசாங்கம் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை. ஒரு குறுகியகால இடைவெளிக்குள் பொருட்களின் விலைகள் 100 -- 200 சதவீதம் அதிகரித்த அதேவேளை மக்களின் வருமானத்தில் எந்த மாற்றமும் இல்லை. வருமானம் மேலும் வீழ்ச்சியடைந்தது என்றும் கூறலாம்.

இலங்கையின் பொருளாதாரம் கடந்தவருடம் 9 சதவீதத்தினால் சுருங்கியது. இவ்வருடம் நான்கு சதவீதத்தினால் சுருங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தங்கள் தொழில் வாய்ப்புக்களையும் இழக்கிறார்கள். இத்தகைய ஒரு

(09ஆம் பக்கம் பார்க்க)

# "மூட்டைப்பூச்சிகளுக்கு இரையான கைதி" அமெரிக்க சிறையில் நடந்த அதிர்ச்சி சம்பவம்!

அமெரிக்காவில் உள்ள ஜோர்ஜியா மாகாணத்தில் இருக்கும் அட்லான்டா நகர சிறைச்சாலையில் உயிரிழந்த ஒரு நபரை "பூச்சிகளும் மூட்டைப் பூச்சிகளும் உயிரோடு சாப்பிட்டுவிட்டதாக" அவரது குடும்ப வழக்கறிஞர் குற்றம் சாட்டியுள்ளார்.

லாஷான் தாம்சன் ஒரு சிறு குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டார் என்றும் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் அதிகாரிகள் தீர்ப்பளித்த பிறகு புல்டன் மாவட்ட சிறையின் மனநல பிரிவில் வைக்கப்பட்டார்.

அவரது குடும்ப வழக்கறிஞரான மைக்கேல் டி ஹார்பர், தாம்சனின் உடல் முழுக்க பூச்சிகள் ஏற்படுத்திய துளைகள் நிறைந்திருந்ததைக் காட்டும் புகைப்படங்களை வெளியிட்டார்.

அவர் குற்றவியல் விசாரணைக்கு கோரிக்கை விடுத்துள்ளதோடு, வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் செய்தியாளர்களிடம் கூறினார்.

"தாம்சன் ஒரு மோசமான சிறை அறையில் பூச்சிகள் மற்றும் மூட்டைப் பூச்சிகளால் உயிருடன் சாப்பிடப்பட்டதால் இறந்து கிடந்தார். தாம்சன் வைக்கப்பட்டிருந்த சிறை ஒரு நோயுற்ற விலங்குக்குக் கூட ஏற்றதல்ல. இப்படியொரு நிலையில் அவரை வைத்திருக்கக்கூடாது," என்று வழக்கறிஞர் ஹார்பர் தனது அறிக்கையில் தெரிவித்தார்.



புல்டன் கவுன்டியின் மருத்துவ கண்காணிப்பாளருடைய அறிக்கையின்படி, தாம்சன் செப்டம்பர் 19ஆம் திகதியன்று (அவர் கைது செய்யப்பட்டு 3 மாதங்களுக்குப் பிறகு) சிறையில் அவர் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையில் பேச்சு மூச்சின்றி கிடந்தார். உள்ளூர் காவல்துறை, மருத்துவப் பணியாளர்கள் ஆகியோர் அவரை உயிர்ப்பிக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து அவர் இறந்து விட்டதாக யுஎஸ்ஏ டுடே தெரிவித்துள்ளது.

தாம்சனின் நிலைமை மோசமடைந்து வந்ததை தடுப்புக்காவல் அதிகாரிகளும் மருத்துவப் பணியாளர்களும் கவனித்த தாகவும், இருந்தும் அவருக்கு உதவிகளை வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சிறைப் பதிவுகள் காட்டுகின்றன என்று வழக்கறிஞர் ஹார்பர் கூறுவதாக சிபிஎஸ் செய்தியறிக்கை தெரிவிக்கிறது.



மருத்துவ பரிசோதகரின் அறிக்கை மனநல வார்டில் உள்ள அவரது அறையில் "கடுமையான மூட்டைப்பூச்சிப் பரவல்" இருப்பதாகக் கூறியுள்ளது. ஆனால் தாம்சனின் உடலில் அதிர்ச்சிக்கான தெளிவான அறிகுறிகள் எதுவுமில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது இறப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று அந்த அறிக்கை கூறுகிறது.

**மூட்டைப் பூச்சிகள் உயிரைப் பறிக்கக் கூடியவையாக இருக்குமா?**

வழக்கறிஞரால் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் தாம்சனின் நோயுற்ற தோற்றத்தைக் காட்டுகின்றன. அவரது முகமும் உடற்பகுதியும் பூச்சிகளால் சூழ்ந்திருப்பதைக் காட்டுகின்றன.

அந்தப் படங்களில் காணப்படுவதைப் போல் சிறை அறையின் நிலைமை இருப்பது மிகவும் "பயங்கரமானது" என்று மூட்டைப்பூச்சிகளில் நிபுணத்துவம் பெற்ற கென்டக்கி பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் வல்லுநர் மைக்கேல் பாட்டர் கூறினார்.

"நான் 20 ஆண்டுகளுக்கும் மேலாக மூட்டைப்பூச்சிகளை ஆராய்ந்து வருகிறேன். நான் பார்ப்பது உண்மையாக இருப்பின், இந்த அளவுக்குக் கொடூரமான ஒன்றை நான் இதுவரை பார்த்ததில்லை எனக் கூறலாம்," என்கிறார் மைக்கேல் பாட்டர்.

"மூட்டைப் பூச்சி கடித்தால் பொதுவாக மரணம் ஏற்படாது. ஆனால், சில அரிதான சந்தர்ப்பங்களில் பெரியளவில் மூட்டைப் பூச்சிகள் பரவியிருக்கும் இடத்தில் நீண்டகாலம் இருப்பது கடுமையான ரத்த சோகையை ஏற்படுத்தும். இதற்கு சிகிச்சையளிக்காமல் விடுவது மிகவும் ஆபத்தானது," என்றும் பாட்டர் கூறுகிறார்.

"மூட்டைப் பூச்சிகள் ரத்தத்தைக் குடிக்கின்றன. மிகப்பெரிய எண்ணிக்கையிலான மூட்டைப் பூச்சிகள் மிகப்பெரிய அளவில் ரத்தத்தை உறிஞ்சுகின்றன," என்று மைக்கேல் பாட்டர் கூறினார்.

இதன் தீவிர நிகழ்வுகளின்போது, பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வாமையை அனுபவிக்கலாம் மற்றும் அதி ஒவ்வாமை அதிர்ச்சி நிலைக்கும் செல்லலாம், இது அபாயகரமானது என்றும் கூறுகிறார் பாட்டர்.

**விசாரணை தொடக்கம்**

"இப்போதைய சிறை வசதியின் பாழடைந்த, வேகமாக அரிக்கும் நிலைமைகள், அனைத்து கைதிகள், ஊழியர்களுக்கும் சுத்தமான, ஆரோக்கியமான சூழலை வழங்குவதற்கான இலக்கை அடைவதைச் சாத்தியமற்றதாக ஆக்கியுள்ளது ஒரு ரகசியமான விஷயம் இல்லை," என்று புல்டன் மாவட்ட ஷெரிஃப் அலுவலகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறையின் நிர்வாக அலுவலகம், தாம்சனின் மரணத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் குறித்து முழு விசாரணையை அறிவித்துள்ளது. கூடுதலாக, "புல்டன் மாவட்ட சிறைக்குள் உள்ள மூட்டைப்பூச்சி, பேன் மற்றும் பிற பூச்சித் தொல்லைகளுக்குத் தீர்வு காண" 500,000 டாலர்களை உடனடியாகச் செலவு செய்துள்ளதாக அந்த அறிக்கை கூறியது.

சிறைச்சாலை நிர்வாகம், "சுகாதார நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்கான பாதுகாப்பு நெறிமுறைகளை" புதுப்பித்துள்ளது.

"நடந்து வரும் விசாரணையில், வழங்கப்பட்ட மருத்துவ பராமரிப்பு தொடர்பான விவரங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், இந்த வழக்கில் ஏதேனும் கிரிமினல் குற்றச்சாட்டுகள் தேவையா என்பதும் தீர்மானிக்கப்படும்," என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஷெரிப் அலுவலகம், "ஓர் உயரடுக்கு பராமரிப்பு, மனநல சேவைகள், பாதுகாப்பு மற்றும் தூய்மை ஆகியவற்றை வழங்குவதற்கு" புதிய, பெரிய சிறைச்சாலையைக் கட்டுவதற்கான கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியது.

அதிக மக்கள்தொகை, குறைவான நிதி மற்றும் சுகாதாரமற்ற சிறையாக நீண்டகாலம் புகழ்பெற்றுள்ள தற்போதைய நிலைமையில் இருக்கும் சிறைக்குப் பதிலாக புதிய புல்டன் கவுன்டி சிறைச்சாலைக்கான சாத்தியக்கூறு திட்டங்களை மாவட்ட ஆணையர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு, மனித உரிமைகளுக்கான தெற்கு மையம், புல்டன் கவுன்டி சிறைச்சாலையில் பேன், மூட்டைப்பூச்சி போன்ற பூச்சிகளின் கட்டுப்பாடற்ற பரவல் அங்குள்ள மக்களை அபாயகரமான அளவுக்கு ஊட்டச்சத்து குறைபாட்டை ஏற்படுத்தியுள்ளது என்ற தலைப்பில் ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டது.

அதில், சிறைச்சாலையை பாதிக்கும் பல சிக்கல்களைக் கோடிட்டுக் காட்டி, "எதிர்கால பரவல்களைக் கட்டுப்படுத்தவும் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்தவும்" பரிந்துரைகளை வழங்கியது.

அமெரிக்காவில் உள்ள சிறைச்சாலையில் இப்படியொரு நிலைமை இருந்து கொண்டிருக்கின்றபோதுதான், அமெரிக்கா உலக நாடுகளுக்கு மனித உரிமை தொடர்பில் பாடம் எடுத்து வருகின்றது என்று மனித உரிமை ஆர்வலர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

# போராட்டங்களுக்கான தார்மீக...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைவரத்தில் அரசாங்கத்திற்குள் நிலவும் ஊழலும் தவறான முகாமைத்துவமும் உரிய முறையில் கையாளப்படாமல் இருப்பதை காணும் மக்கள் தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டி போராடுவதற்கு தார்மீக நியாயப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்.

அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும்போது, அவலங்களுக்கான பொறுப்பை ஏற்று பதவி விலக மறுக்கும் அரசாங்கம் சட்ட ரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் அரசியல் பரிகாரங்களை தேடுவதற்கான மார்க்கங்களும் அடைக்கப்படும்போது போராட்டங்கள் தார்மீக அடிப்படையில் நியாயபூர்வமானவையாகின்றன. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து ஒரு வருடத்துக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையில் தாங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய பிரதிநிதிகளை மக்கள் தெரிவுசெய்வதற்கு வாய்ப்பளிக்க தேர்தல்களும் நடத்தப்படவில்லை. பொருளாதார வீழ்ச்சிக்கு பொறுப்பானவர்கள் செய்த தவறுகளுக்காக அவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கான செயன்முறைகளும் முன்னெடுக்கப்படவில்லை. முன்னுதாரணமாக அமையக்கூடிய இந்த நடவடிக்கைகளுக்கு பதிலாக வரி அதிகரிப்புகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் தொழில்வாய்ப்பு குறைப்புகள் மூலமாக மக்கள் மீது மேலும் மேலும் பொருளாதார சுமைகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மேலும் கூடுதல் கடன்கள் பெறப்பட்டிருக்கும் அதேவேளை அந்த நிதி வளங்களை எவ்வாறு ஒதுக்குவது, செலவழிப்பது என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு நாட்டை இன்றைய நிலைக்கு கொண்டுவந்ததற்கு காரணமாக இருந்தவர்களின் கைகளிலேயே இருக்கிறது. கடந்த காலத்தைப் போன்று மீண்டும் நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கடந்த கால தவறுகளுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்படவோ அல்லது அதிகாரப் பதவிகளில் இருந்து அகற்றப்படவோ இல்லை. இந்த நிலைவரங்கள் எல்லாம் சேர்ந்து பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஒடுக்குவதற்கு நாட்டம் கொண்டிருக்கும் போராட்ட இயக்கம் தொடருவதற்கான அடிப்படை தார்மீக நியாயப்பாடாக அமைகின்றன.

# வாகனம் மோதி மூதாட்டி மரணம்!

கொழும்பு, ஏப். 19

புசல்லாவை, இரட்டைப் பாதை பகுதியில் கண்டி-நுவ ரெலியா பிரதான வீதியில் வாகனம் மோதியதில் மூதாட்டி ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இவ்விபத்து நேற்று அதி காலை 3.30 மணியளவில் இடம் பெற்றிருக்கலாம் எனக் கூறப் படுகின்றது.

நுவரெலியாவிலிருந்து கண்டியை நோக்கிப் பயணித்த வாகனமொன்று இவரை மோதி விட்டு, தப்பிச்சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக் கின்றனர்.

அதிக இரத்தபோக்கு ஏற் பட்டதால் குறித்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரி ழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோத னைக்காக கம்பளை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது. சடலம் இதுவரை அடையாளம் காணப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக் கது.

இந்த விபத்து ஏற்பட்டதற் கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் புசல்லாவை பொலிஸார், கம்பளை பொலிஸ் கைரேகை அடையாளப் பிரிவு டன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (அ)

# புதிய வீசா மோசடி முறையை முறியடித்தனர் அதிகாரிகள்!

கொழும்பு, ஏப். 19

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச் செல்வதற்கு இலங்கையர்கள் பயன்படுத்திய புதிய முறை மையை முறியடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியா ஊடாக மோல்டா வுக்கு செல்ல முற்பட்ட தெஹி வளையைச் சேர்ந்த 32 வயது டைய நபர் ஒருவர் கைது செய் யப்பட்டார். இதைத் தொடர்ந்து இந்த மோசடி முறியடிக்கப்பட் டதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. பல ஐரோப்பிய நாடு களின் தூதரகங்கள் இந்தியா வில் அமைந்துள்ளன. அங்கி ருந்து, தூதரக அதிகாரிகளும் இலங் கையர்களுக்கான வீசா நடை முறைகள் உட்பட விவகாரங்களைக் கையாளு கின்றனர்.

இதன்மூலம், தரகர்களின் உதவியுடன் தவறான ஆவணங் களைப் பயன்படுத்தி இலங்கை யர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு வீசா பெறுவதற்காக இந்தியா வுக்கு செல்வது கண்டறியப்பட் டுள்ளது.

போலி ஆவணங்களை பயன்படுத்தி மோல்டாவுக்கு வீசா பெற்று இந்தியா ஊடாக மோல்டாவுக்கு செல்ல முயன்ற இளைஞர் ஒருவரை கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் நடத்தப் பட்ட விசாரணைகள் புதிய வீசா மோசடியை முறியடிக்க சுங்க அதிகாரிகள் வழிவகுத்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இ. போ. ச. பேருந்து - கார் விபத்து மாணவர்கள் உட்பட 15 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 19

கேகாலை நகரில் பாட சாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற இ. போ. ச. பேரும் காரும் மோதிய விபத்தில் 15 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில், 12 மாண வர்கள், இரண்டு ஆசிரியர்கள் மற்றும் பேருந்தின் ஓட்டுநர் ஆகியோரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

கார் சாரதியின் உறக்க கலக் கம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஏ. எல். விடைத்தாள்களை திருத்த பல்கலை ஆசிரியர்கள் வருவர்!

உயர்தர பரீட்சை விடைத் தாள்களை திருத்துவதற்கு பல்க லைக்கழக ஆசிரியர்கள் கூடிய விரைவில் வருவார்கள் என்று நம்பிக்கை உள்ளதென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அவர் மேலும் கூறியவை வருமாறு, தற்போது பேராசிரியர்களுக்கான விடைத் தாள் திருத்தும் பணிக்கான கொடுப்பனவு 90வீதத்துக்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் சங்கங்களுடன் ஆலோசித்து, 2 மாதங்களுக்கு முன், உதவித்தொகையை உயர்த்தி, கூட்டுஉதவித் தொகையை, 2,000 ரூபாய் உயர்த்தினோம். 80 கிலோ மீற்றருக்கு மேல் பயணிப்பவர்க ளுக்கு 2,900 ரூபாயை உயர்த்தி னோம். இதன்படி கொடுப்பன வுகள் 90 வீதத்துக்கும் அதிக மாக உயர்த்தப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# நலன்புரி திட்டங்களுக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 19

நலன்புரி பலன்கள் சட்டத்தின் விதி களின்படி நலன்புரி பலன்கள் செலுத்தும் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப் படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் முன் வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்ச ரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமுல்படுத்தப்படவுள்ள நலன்புரி கொடுப்பனவுத் திட்டத்தை தயாரிப்பதற் கான வழிகாட்டுதல்களைப் பெறுவதற்கு ஜனாதிபதியின் செயலாளரால் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி குழுவின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு வறுமையில் வாடுவோர் மாற்றுத்திறனாளிகள், நலிவடைந்தவர் கள் மற்றும் மிகவும் ஏழ்மையான சமூகக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்ட மிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)






ஈழநாடு
19 ஏப்ரல் 2023 புதன்கிழமை 

# அதிகஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் எம்மிடம் படகுப்பாதைக்கும் கட்டண அறவீடா?

## குருக்கள்மடம் துறையில் ஆசிரியர்கள் விசனம்



மட்டக்களப்பு, ஏப். 19

**மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம்-அம்பிளாந்துறை ஓடத்துறையில் சேவையிலீடு படும் படகுப்பாதையில் கட்டணம் செலுத்தித் தாம் பயணிக்க முடியாது என ஆசிரியர்கள் தெரிவித்ததையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த பாதைப் போக்குவரத்து சுமார் 3 மணித்தியாலங்கள் குருக்கள்மடம் துறையில் தடைப்பட்டிருந்தது.**

பாடசாலையின் புதிய தவணைக்கான ஆரம்பநாளான நேற்று முன் தினம் திங்கட்கிழமை குறித்த படகுப்பாதை ஊடாக போக்குவரத்துச் செய்யும் அதிகளவு அதிபர், ஆசிரியர்களும், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்களும், காலை 7 மணிக்கு படகுப் பாதை படுவான்கரைப் பகுதிக்குப் புறப்படும் நேரத்திற்கு வழக்கமாகச் செல்வது போன்று குருக்கள்மடம் கரைக்குச் சென்றுள்ளனர்.

வழக்கம் போல் அனைவரும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாதையில் ஏறியுள்ளனர். அங்கிருந்த வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் பற்றுச்சீட்டுக்களைக் கொடுத்து கட்டணம் செலுத்துமாறு தெரிவித்ததையடுத்து அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டது.

தாம் இதுவரை காலமும் இப்படகுப் பாதையூடாக எதுவித கட்டணங்களுமின்றியே பயணம் செய்து அதிக கஷ்டப் பிரதேசங்களுக்கு மிகவும் தொலை தூரம் சென்று மாணவர்களுக்கு கல்வி புகட்டி வருகின்றோம். திடீரென எம்மிடம் நிதி வசூலிப்பது என்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்ததையடுத்து குறித்த படகுப் பாதை சேவையிலீடுபடாமல் காலை 9 மணிவரை தடைப்பட்டிருந்தது.

பின்னர் அங்கிருந்த அரச உத்தியோகத்தர்கள் தம்மால் கட்டணம் செலுத்தி இப்பாதையில் பயணம் செய்ய முடியாது என தெரிவித்து கடமைக்குச் செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

10 வருடங்களைக் கடந்தும் மிக நீண்டதூரம் பணயம் செய்து அதி கஷ்டப்பாடசாலை மாணவர்களுக்கு நாம் கல்வி புகட்டி வருகின்றோம். தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில், எமக்கு அரசாங்கத்தால் மாதாந்தம் வழங்கப்படும் வேதனமே போதாது. எமது புனிதமான தொழிலை அரசாங்கம் புதினமாகப் பார்ப்பது எமக்கு கவலையளிக்கின்றது.

எனவே இதுவரை காலமும் நடைமுறையிலிருந்தது போல் எதுவித கட்டணங்களுமின்றி நாம் பயணம் செய்து எமது சேவையைத் தொடர்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும்.

சுமார் 5 வருடங்கள் அதி கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றினால் நாங்கள் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியும். ஆனாலும் அவ்வாறு இடமாற்றம் பெறாமல் 10 வருடங்கள் கழிந்த நிலையிலும் அப்பகுதி மாணவர்களின் நலன்கருதி இதுவரை இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காமல் சேவை செய்து வருகின்றோம்.

இந்நிலையில் நாம் பயணிக்கும் படகுப்பாதைக்கும் கட்டணம் அறவீடு செய்தால் நாம் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல நேரிடும். இது தொடர்பில் எமது உயர் அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளோம் என இதன் போது ஆசிரியர்கள் தெரிவித்தனர். (அ)

# அரைகுறையாகக் கிடக்கும் விளையாட்டரங்கை பார்வையிட்டனர் அமைச்சரும் செயலாளரும்!



அக்கரைப்பற்று, ஏப். 19

காரைதீவு விளையாட்டு கழகம் நிருமாணித்து அரைகுறையாக கிடக்கும் உள்ளக விளையாட்டரங்கை, கிராமிய வீதி அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேஷன் ஆகியோர் பார்வையிட்டார்கள்.

கழகத்தின் அழைப்பை ஏற்று புத்தாண்டன்று காரைதீவில் இடம் பெற்ற புத்தாண்டு விளையாட்டு விழாவுக்கு வருகை தந்த இருவரும், நிதியின்மை காரணமாக அரைகுறையில் கிடக்கும் உள்ளக விளையாட்டரங்கை பார்வையிட்டனர்.

இதன்போது கழகத் தலைவர் ரி.தவக்குமார், கழகப் போஷகர்களான சிவ.ஜெகராஜன், வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்டோர் விளையாட்டரங்கு தொடர்பான பூரண விவரங்களை வழங்கினார்கள்.

இதனை நிறைவுறுத்த முப்பது மில்லியன் ரூபாய் தேவையாகின்றது என்றும் குறிப்பிடப்பட்டது.

இதில் ஒரு பகுதியையாவது முதலில் செய்து தரவேண்டும் என்று கழகத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

அந்த கட்டடத்தை பார்வையிட்ட அவர்கள் முதலில் கூரை அமைப்பதற்கும் அருகில் வீதி அமைப்பதற்கும் முயற்சி செய்வதாக கூறிச் சென்றார்கள். (அ)

# சாய்ந்தமருது பள்ளிவாசலில் இப்தார்

அக்கரைப்பற்று, ஏப். 19

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் மரைக்காயர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்தார் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 5 மணி முதல் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் மேல் மாடியில் இடம்பெறவுள்ளது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பொறுப்பாளர் சபைத் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம் தலைமையில், அதன் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூரின் ஒருங்கிணைப்பில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு மரைக்காயர் சபையின் உறுப்பினர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், ஜமாத்தார்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# நிந்தவூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிலையத் திறப்பு விழா

அக்கரைப்பற்று, ஏப். 19

நிந்தவூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழா, சங்கத்தின் தலைவர் ஏ. சஹீத் அஹமட் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நவீன மயப்படுத்தப்பட்ட இவ் எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழாவுக்கு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.சி.பைஷல் காசிம் மற்றும் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.சிவலிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு, எரிபொருள் நிலையத்தை திறந்து வைத்தனர்.

இதன்போது புதிதாக திறந்து வைக்கப்பட்ட எரிபொருள் நிலையத்தின் மூலம் நிந்தவூர் பிரதேச விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை முன்னெடுப்பது தொடர்பில் விசேட கருத்துரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வின்போது நீண்டகாலமாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஜப்பாரின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், நிகழ்வின் அதிதிகளும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக பிரிவில் உள்ள 12 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் ஐந்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்கி வருகின்ற நிலையில் இப்பிராந்தியத்தில் ஆறாவது எரிபொருள் நிரப்பு நிலையமாக இவ் எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (அ)

# திண்மக்கழிவுகள் முகாமைத்துவ நிலையத்தால் சுகாதார பிரச்னை

மட்டக்களப்பு, ஏப். 19

மட்டக்களப்பு- மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு அமலபுரம் பகுதியில் உள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தினால் அப்பகுதியில் உள்ள மக்கள் சுகாதார பிரச்னைகளை எதிர்நோக்குவதாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு அமலபுரம் பகுதியில் 2010ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் குடியமர்த்தப்பட்ட போது அப்பகுதியில் 2014ஆம் ஆண்டு திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டு அங்கு கழிவுகள் சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் அப்பகுதியில் பெறப்படும் கழிவுகள் மீள்சுழற்சி செய்யப்பட்டு கூட்டுப்பசளை தயாரிக்கப்படும் எனவும் இதனால் பொதுமக்களுக்கு பாதிப்புகள் ஏற்படாது எனவும் உத்தரவாதம் வழங்கப்பட்டதுடன் அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த பகுதியில் கழிவுகள் கொட்டப்படும் இடமாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுவருவதுடன் எந்தவித பசளை உற்பத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தமக்கான தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் இது வரை யாருக்கும் எந்தவித தொழிலும் வழங்கப்படவில்லையெனவும் மக்கள் கூறினர்.

குறித்த பகுதியில் மாமிச கழிவுகளையும் கொட்டுவதன் காரணமாக சுகாதாரத்திற்கு பாரிய தீங்குகள் ஏற்படுதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



அத்துடன் மாமிச கழிவுகளை புதைப்பதன் காரணமாக நிலக்கீழ் நீர் பாதிக்கப்படுவதாகவும் கிணறுகளின் நீர் பாதிக்கப்படுவதன் காரணமாக குடிதண்ணீரைப்பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் மக்கள் குறிப்பிட்டனர்.

மழை காலங்கள் குறித்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்குள்ளிருந்து வழிந்தோடும் வெள்ள நீர் மக்கள் குடியிருப்பு நோக்கி வருவதன் காரணமாக சுகாதாரம் தொடர்பிலான பாரிய பிரச்னைகளை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அப்பகுதியை சேர்ந்த மக்கள் தோல் நோய் மற்றும் ஈக்களின் தொல்லைகளினால் பாதிக்கப்படுவதுடன் பல்வேறு தொற்று நோய்களினாலும் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அப்பகுதிகளின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் மாமிச கழிவுகளை கொட்டுவதை நிரந்தரமாக நிறுத்தியுள்ளதாகவும், குறித்த பகுதியில் சுகாதார பிரச்னைகள் ஏற்படாத வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் மண்முனைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஜோ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ)



# மக்களின் ஆத்திரம் நியாயமானது ஆனால் சீர்திருத்தம் அவசியமானது

## தொலைக்காட்சி உரையில் பிரான்ஸ் ஜனாதிபதி ஒப்புதல்

பாரிஸ், ஏப். 19

**ஓய்வூதியச் சீர்திருத்தச் சட்டம் ஏற்படுத்திய கொந்தளிப்புகளுக்குப் பின்னர் முதல் முறையாக நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் உரையாற்றிய பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன்- அந்தச் சட்டம் நாட்டு மக்களில் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை என்பதை ஒப்புக்கொண்டார். ஆனாலும் அது அத்தியாவசியமானது என்று மீண்டும் உறுதிபடத் தெரிவித்தார். அதன் மீது பிரெஞ்சு மக்கள் கொண்டுள்ள சீற்றத் தைத் தான் செவிமடுப்பதாகவும் கூறினார். ஓய்வூதியர்களது எண்ணிக்கையும் எதிர் பார்க் கப்படும் ஆயுள்காலமும் அதிகரிப்பதால் எதிர்காலத்தில் அனைவருக்கும் ஓய்வூதியம் கிடைப்பதை உறுதி செய்வதற்குச் சீர்திருத்தச்சட்டம் அவசியமானது என்று அவர் அதனை நியாயப்படுத்தினார். படிப்படியாக அதிக காலம் வேலை செய்வது உற்பத்தியைப் பெருக்கி முழு நாட்டினதும் செல்வத்தை அதிகரிக்கச் செய்யும். அது எங்கள் எதிர்கால சந்ததி யினருக்கு நன்மையாக அமையும்-என்றும் மக்ரோன் கூறினார்.**

வேலைக் காலம் நீடிப்பு, தொழில் சூழலில் நெருக்கடிகள், விலைவாசி உயர்வு போன்றவை காரணமாக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற கோபத்தைத் தணிக்க 100 நாள் திட்டம் ஒன்றை அரசு முன்னெடுக்கும் என்று தனது உரையில் அவர் அறிவித்தார்.

நாட்டின் சுதந்திர தினமாகிய ஜூலை 14 ஆம் திகதி முதல் அந்த மக்கள் சேவைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். தொழிற்சங்கங்களுடன் பேசுவதற்கான கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன-என்றும் மக்ரோன் தெரிவித்தார்.

தொழில் சட்டம், கல்வி, சுகாதாரம், நீதித் துறைகளில் செய்யப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பாகவும் அரசின் எஞ்சிய மூன்றாண்டுத் திட்டம் பற்றியும் குறிப்பிட்டுப் பேசிய அவர், அந்த விவரங்கள் வரும் நாட்கள் ளில் வெளியிடப்படும் என்ற தகவலையும் வெளியிட்டார்.

நாட்டு மக்களில் பெரும்பாலானோரால் எதிர்க்கப்படுகின்ற ஓய்வூதியச் சீர்திருத்தத்தை கடும் எதிர்ப்பை மீறிச் சட்டமாக நிறைவேற்றியதால் மக்ரோன் அரசியலில் செல்வாக்கிழந்து தனித்துப் போய் உள்ளார். அவரது அரசு பெரும் நெருக்கடிக்குள் ஆட்சியைக் கொண்டு நடத்துகின்ற நிலைவரம் காணப்படுகிறது. இந்த நெருக்கடிக்குள் இருந்து மீள்வதற்கு அவர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்ற எதிர்பார்ப்புச் சகல தரப்புகளிலும் காணப்படுகிறது. அதனால் அவரது நேற்றைய தொலைக்காட்சி உரைக்கு முக்கியத்துவம் இருந்தது. 15 நிமிட நேர உரையில் ஓய்வூதியச் சட்டம் அதன் அடுத்தடுத்த வழிமுறைகளில் நடைமுறைப்படுத்தப்படும். அதில் எடுத்துவைத்து காலை அரசு பின் வைக்காது என்பதைத் தெட்டத் தெளிவாக அவர் எடுத்துரைத்துள்ளார்.

ஓய்வூதிய வயதை 62 இல் இருந்து 64 ஆக அதிகரிக்கின்ற அந்தச் சட்டத்தை வாபஸ்பெற வேண்டும் என்று கோரித் தெருக்களில் நிற்போருக்கு அவரது உரையில் எந்தவித நிவாரணங்களும் அறிவிக்கப்படவில்லை. அதனால் தொழிலாளர் மத்தியில் சீற்ற உணர்வு மேலும் அதிகரித்துள்ளது.

நாடெங்கும் கடந்த சில மாதங்களாக சமூக, அரசியல் நெருக்கடியையும் குழப்பங்களையும் வன்முறையையும் உருவாக்கியுள்ள ஓய்வூதியச் சட்ட விடயத்தில் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற ஆத்திர உணர்வைத் தணிப்பதற்கான அடிப்படைகள் எதனையும் அரசுத் தலைவரது உரை உள்ளடக்கியிருக்கவில்லை. அது அடிப்படைப் பிரச்சினையை விட்டுவிட்டுச் சம்பந்தமில்லாத வேறு விடயங்களை கொண்டுள்ளது.

மக்களது எதிர்பார்ப்புக்களை எள்ளளவும் திருப்திப்படுத்தவில்லை. அதிபர் யதார்த்தத்தை மறந்துவிட்டு எதையோ பேசுகிறார். அவரது உரையில் தீர்வுகள் வெற்றிடமாக உள்ளன. - இவ்வாறு எதிரணித் தலைவர்களும், தொழிற்சங்கப் பிரமுகர்களும் காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு மக்ரோனின் உரை முடிவடைந்தகையோடு, பாரிஸ் நகரின் சில இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் வன்முறை சம்பவங்களும் வெடித்தன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

# சூடானில் தொடரும் வன்முறை!

## பலி எண்ணிக்கை 185 ஆக அதிகரிப்பு



கார்ட்டூம், ஏப். 19

சூடானில் ஏற்பட்ட வன்முறை காரணமாக கிட்டத்தட்ட 185 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

1,800 பேர் காயமடைந்துள்ளனர் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சி நடந்து வரும் சூடானில் இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளில், ஆர்.எஸ். எவ். என்ற துணை இராணுவ படையே ஈடுபட்டு வருகிறது.

தலைநகரான கார்ட்டூமில் உள்ள அதிபர் மாளிகை மற்றும் சர்வதேச விமான நிலையத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக துணை இராணுவ படை அறிவித்தது.

இதனால் கார்ட்டூமில் ராணுவத்துக்கும், துணை ராணுவ படையினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. அதன்பின், இது நாடு முழுவதும் கலவரமாக வெடித்தது.

இந்நிலையில், சூடானில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தலைநகர் கார்ட்டூம் உள்பட பல்வேறு நகரங்களில் துப்பாக்கிச் சூடு, குண்டு வீச்சு போன்ற சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதனால் கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை 185 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை 185 பேர் உயிரிழந்ததாகவும், 1,800 -க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் சூடானில் பொதுமக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். (அ)

# சிரியாவில் ஐ.எஸ் தலைவர் கொல்லப்பட்டிருக்கலாம்!

## கூறுகின்றது அமெரிக்கா

நியூயோர்க், ஏப். 19

சிரியாவில் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ் அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் வடக்குப் பகுதியில் கடந்த திங்கள் அதிகாலையில் ஐ.எஸ் அமைப்பின் முக்கிய நபராகக் கருதப்படும் அப்த்-அல் ஹாடி மஹ்மூத் அல்-ஹாஜி அலி என்பவர் பதுங்கியிருப்பதாக வந்த தகவலையடுத்து அமெரிக்கப் படையினர் குறிப்பிட்ட பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்தினர்.

திங்கள்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட இந்த தாக்குதலில், ஐஎஸ் தலைவர் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில், மேலும் இரண்டு ஐ.எஸ் உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அல்-ஹாஜி அலி, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவில் பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிடுவதற்குப் பொறுப்பான ஒரு செயல்பாட்டுத் தலைவர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. (அ)




# ஈரான் அணுஆயுத திட்டத்தை நிறுத்த செல்வாக்கை பயன்படுத்தவேண்டும்

## சீனாவிடம் கேட்கிறது இஸ்ரேல்

ஜெருசலேம், ஏப். 19

அணு ஆயுதங்களை உருவாக்குவதைத் தடுக்க ஈரான் மீது அதன் செல்வாக்கை பயன்படுத்துமாறு சீனாவை வலியுறுத்தியுள்ளார் இஸ்ரேலின் உயர்மட்ட இராஜதந்திரி.

இஸ்லாமிய குடியரசு ஒரு அணு ஆயுத நாடாக மாறுவதைத் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இஸ்ரேல் எடுக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் எலி கோஹென், சீன வெளியுறவு அமைச்சர் குயின் கேங்குடன் பேசியுள்ளார்.

அணுசக்தி திட்டத்தின் முன்னேற்றத்தை நிறுத்த ஈரான் மீது செல்வாக்கை செலுத்துமாறு அவர் அழைப்பு விடுத்தார். இது மத்திய கிழக்கு மற்றும் உலகின் பல நாடுகளுக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது.

தெஹ்ரானில் உள்ள பயங்கரவாத ஆட்சி அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தடுக்க இஸ்ரேல் அரசு எந்த வகையிலும் செயல்படும் என்று கோஹன் ருவிட்டரில் தெரிவித்தார்.

ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்க முயற்சிப்பதாக இஸ்ரேல் குற்றம் சாட்டுகிறது. அதை தெஹ்ரான் மறுக்கிறது.

ஈரானின் வேகமாக முன்னேறி வரும் அணுசக்தி திட்டத்தை கட்டுப்படுத்த இராஜதந்திர முயற்சிகள் தோல்வியுற்றால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று இஸ்ரேல் பலமுறை எச்சரித்துள்ளது.

சீனாவும் அங்கம் வகிக்கும் 2015 அணுசக்தி ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் முயற்சிகள் கடந்த ஆண்டு முதல் முடங்கியுள்ளன.

இந்த ஒப்பந்தம் ஈரானின் அணுசக்தி திட்டத்தில் கடுமையான ஆனால் தற்காலிக தடைகளுக்கு ஈடாக சர்வதேச தடைகளில் இருந்து நிவாரணம் அளித்தது. 2018 இல் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கீழ் அமெரிக்கா அதிலிருந்து விலகிய பின்னர் இந்த ஒப்பந்தம் செயலிழந்தது.

ஈரானுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்ட சீனா, சமீபத்தில் ஈரானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் ஒரு இராஜதந்திர முன்னேற்றத்தை ஏற்படுத்தியது, இதன் விளைவாக ஏழு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இரு பிராந்திய சக்திகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் மீட்டெடுக்கப்பட்டன. (அ)

# ஆக்ரோஷம் காட்டிய கோலி அபராதம் செலுத்தினார்!

பெங்களூர், ஏப். 19

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் நடத்தை விதிகளை மீறியமைக்காக ஆர். சி. பி. வீரர் கோலிக்கு 10 சதவீதம் அபராதம் விதிக் கப்பட்டுள்ளது.

விராட் கோலி பொதுவாக மைதானத்தில் ஆக்ரோஷ த்துடன் இயங்குபவர். அண்மைக் காலமாக மிகவும் அமைதியாக இருந்து வருகிறார். இந்த சூழலில் நேற்று முன்தினம் சென்னை அணிக்கு எதிராக களத்தடுப்பு செய்தபோது 27 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார் சென்னை வீரர் ஷிவம் துபே. அவர் அடித்த பந்தை முகமது சிராஜ் பிடித்திருந்தார். அதை கோலி மிகவும் ஆக்ரோஷமாக கொண்டாடி னார். இதுதான் அபராதம் விதிக்கப்பட காரணம் எனத் தெரிகிறது.

ஐ. பி. எல். நடத்தை விதிகள் 2.2-ன் (லெவல் 1) கீழ் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (ஐ)



# சர்வதேச ரென்னிஸ் தரவரிசை; முதலிடத்தில் ஜொகோவிச்சே!

லண்டன், ஏப். 19

சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் ஜொகோவிச் முத லிடத்தைத் தக்கவைத்துள்ளார்.

சர்வதேச ரென்னிஸ் சங்கம் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டது.

இதன்படி ஒற்றையர் தரவரிசையில் நோவக் ஜொகோ விச் (சேர்பியா) முதலிடத்திலும், கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) 2ஆவது இடத்திலும் நீடிக்கிறார்கள். மொன்டே கார்லோ மாஸ்டர்ஸ் ரென்னிஸில் மகுடம் சூடிய ரஷ்யாவின் அந்த்ரே ரூப்லெவ் 6ஆவது இடத்தில் தொடருகிறார்.

அந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தோற்ற ஹோல்ஜர் ருனே (டென்மார்க்) இரு இடம் உயர்ந்து தனது சிறந்த தரநிலையாக 7ஆவது இடத்துக்கு முன்னே றியுள்ளார்.

சிட்சிபாஸ் (கிரீஸ்) இரு இடம் சரிந்து 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் எந்த மாற்றமும் இல்லை. போலந்தின் இகா ஸ்வியாரெக் முதலிடத்தில் தொடர் கிறார் (ஐ)

# பாகிஸ்தானுடனான ரி - 20 நியூசிலாந்து த்ரில் வெற்றி!

ராவல்பிண்டி, ஏப். 19

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியில் நியூசிலாந்து அணி த்ரில் வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 5 ஒருநாள், 5 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இருபது - 20 தொடரில் முதலிரு போட்டிகளிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில், இந்த இரு அணிகள் இடையிலான 3ஆவது இருபது - 20 போட்டி லாகூரில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, அணித் தலைவர் ரொம் லதாமின் அரைச்சதத்தின் உதவி யுடன் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 163 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து 164 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி மட்டுமின்றி தொடரையும் கைப்பற்றலாம் என்ற நிலை யில் களம் இறங்கிய பாகிஸ்தான் அணி நியூசிலாந்தின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத் தடுத்து விக்கெட்களை இழந்து தடுமாறியது. அந்த அணியில் முகமது ரிஸ்வான் 6 ஓட்டங், பாபர் ஆசம் ஓர் ஓட்டம், பக்கார் ஷமான் 17 ஓட்டங்கள், சைம் அயூப் 10 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 159 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் நியூ சிலாந்து அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.



# அயர்லாந்துக்கு எதிராக இலங்கை இமாலய வெற்றி!

காலி, ஏப். 19

அபாரமாக பந்து வீசிய பிரபாத் 10 விக்கெட்களை வீழ்த்தியதால் அயர்லாந்து அணியை இன்னிங்ஸ் மற்றும் 280 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி.

இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற் காக அயர்லாந்து அணி இலங்கை வந்துள்ளது. இரு அணிகளிடையே யுமான முதல் டெஸ்ட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 591 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத் தியது.

இதில், அணித் தலைவர் திமுத் கருணாரத்ன 179, குசல் மெண்டிஸ் 140, சதீர சமரவிக்கிரம 104, தினேஷ் சந்திமால் 102 ஓட் டங்களை குவித்திருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி பிரபாத் ஜெய சூரியவின் பந்துவீச்சுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் 143 ஓட்டங்க ளுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதில், லோர்கன் ரக்கர் 45, ஜேம்ஸ் மக்கொலம் 35, ஹறி ரெக்ரர் 34 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர்.

இலங்கையின் சார்பில் பந்து வீசிய பிரபாத் 7 விக்கெட்களையும் விஸ்வ பெர்னாண்டோ 2, ரமேஷ் மெண்டிஸ் ஒரு விக்கெட்டை வீழ்த் தினர்.

448 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த அயர்லாந்து இரண்டாவது இன்னிங்ஸிலும் துடுப்பெடுத்தா டியது. இந்த இன்னிங்ஸிலும் இலங்கையின் பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

தொடக்க வீரர்கள் வேகமாக வீழ்ந்த நிலையில் மத்திய வரிசை வீரர்கள் ஓரளவு தாக்குப் பிடித்த னர். ஹறி ரெக்ரர் 42, ஜோர்ஜ் டொக்ரெல் 32, கம்பெர் 30, என வேகமாக விக்கெட்களை இழந்த னர். நேற்றைய தினமே இரண்டா வது இன்னிங்ஸிலும் 168 ஓட்டங்க ளுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது அயர்லாந்து அணி.

இதனால், இன்னிங்ஸ் மற்றும் 280 ஓட்டங்களால் வெற்றி பெற் றது.

ரமேஷ் மெண்டிஸ் 4, பிரபாத் 3, விஸ்வ பெர்னாண்டோ 2 விக்கெட் களை கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக பிர பாத் ஜெயசூரிய தெரிவு செய்யப் பட்டார். (ஐ)

# பரபரப்பான போட்டியில் பெங்களூரை 8 ஓட்டங்களால் வென்றது சென்னை!

பெங்களூர், ஏப். 19

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதி ரான ஐ. பி. எல். போட்டி யில் சென்னை சுப்பர் கிங்ஸ் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.



ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் நேற்றுமுன்தினம் இரவு பெங்களூர் சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடந்த போட்டியில் எம். எஸ். டோனி தலைமையி லான சென்னை சுப்பர் கிங்ஸ் (சி. எஸ். கே), டூ பிளெஸிஸ் தலைமையிலான றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் (ஆர். சி. பி.) அணிகளும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆர். சி. பி. களத்தடுப்பைத் தெரிவு செய்ய சி. எஸ். கே. முதலில் துடுப் பெடுத்தாடியது. தொடக்க வீரர் ருதுராஜ் கெய்க்வாட் 3 ஓட்டங்க ளில் ஆட்டமிழந்தாலும், டெவன் கொன்வே அதிரடி காட்டி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். அரைச்சதம் கடந்த அவர் 83 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

முன்னதாக ரஹானே 37 ஓட்டங்கள் சேர்த்தும், ஷிவம் துபே, தன் பங்குக்கு வான வேடிக்கை காட்டி 52 ஓட்டங்கள் விளாசினார். இவர்களின் உதவி யால் சென்னை அணி 20 ஓவர் முடி வில் 6 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் குவித்தது.

பெங்களூர் தரப்பில் முகமது சிராஜ், வெய்ன் பர்னெல், விஜயகு மார் வைஷாக், ஹசரங்க, ஹர்ஷல் பட்டேல், மேக்ஸ்வெல் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

227 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங் கிய பெங்களூர் அணிக்கு முதல் ஓவரில் விராட் கோலி விக் கெட்டை எடுத்து அதிர்ச்சி கொடுத் தார் ஆகாஷ் சிங். அடுத்த ஓவரை வீசிய துஷார் தேஷ்பாண்டே தன் பங்குக்கு மஹிபால் லோமரரை ஓட்டமில்லாமல் வெளியேற்றினார்.

ஆர். சி. பியின் ஆரம்ப விக்கெட்கள் சரிவை சந்தித்தாலும், அணித் தலைவர் டூ பிளெஸிஸ் மற் றும் மக்ஸ்வெல் இணைந்து அணியை மீட்டெடுத்தனர். இருவ ரும் சென்னையின் பந்துவீச்சாளர் களை சோதித்தனர். 25 பந்துகளுக்கு முன்னதாகவே அரைச்சதம் கடந்து இருவரும் ஆர். சி. பிக்கு நம்பிக்கை அளித்தனர்.

126 ஓட்டங்களை இணைப்பாட்டம் மூலம் சேர்த்த நிலையில், 76 ஓட்டங் கள் எடுத்திருந்த மக்ஸ் வெல்லை ஆட்டமிழக்க செய்தார் தீக்சன. மக்ஸ்வெல் வெளியேறிய சிறிது நேரத்தில் டூ பிளெஸிஸும் 62 ஓட்டங் களுக்கு நடையைக் கட்டி னார்.

இதன்பின் சீரான இடை வெளியில் ஆர். சி. பியின் விக்கெட்களை சி. எஸ். கே. பந்துவீச்சாளர்கள் வீழ்த்தினர். எனி னும், கடைசி ஓவரில் 19 ஓட்டங் கள் வெற்றிக்கு தேவைப்பட இம் பேக்ட் வீரராக களமிறக்கப்பட்ட பிரபுதேசாய் 3ஆவது பந்தில் சிக்ஸ் அடிக்க ஆட்டத்தில் பரபரப்பா னது. எனினும், பத்திரண அடுத்த பந்தை யோர்க்கராக வீசி அவரை கட்டுப்படுத்தியதுடன் கடைசி பந்தில் பிரபுதேசாய் விக்கெட்டை யும் எடுத்தார்.

இதனால் 20 ஓவர்களில் 8 விக் கெட்கள் இழப்புக்கு 218 ஓட்டங் கள் மட்டுமே எடுத்த பெங்களூர் அணி தோல்விகண்டது. 8 ஓட்டங் கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற சென்னை அணிக்கு நடப்பு தொட ரில் இது 3ஆவது வெற்றியாகும்.

சென்னையின் துஷார் தேஷ் பாண்டே அதிகபட்சமாக 3 விக் கெட்களை வீழ்த்தினார். (ஐ)

# உதிரிப்பாகங்கள் இன்றி பல மாதங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ள விமானங்கள்!



கொழும்பு, ஏப். 19

இயந்திரம் மற்றும் உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினால் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான 5 விமானங்கள் பல மாதங்களாக கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் 24 எயார்பஸ் விமானங்கள் உள்ளதாகவும், அவற்றில் ஏ 330-200 மற்றும் ஏ 330-300 ரகத்தைச் சேர்ந்த 12 விமானங்கள் நீண்ட தூரப் பயணங்களுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய 12 விமானங்கள் குறுகிய தூர பயணங்களுக்கு பயன்படுத்தப்படும் என்றும், ஏ320, ஏ321, ஏ320, ஏ321 நியோ மற்றும் டபிள்யூ 321 நியோ வகையைச் சேர்ந்த விமானங்களே குறுந்தூர பயணங்களுக்கு பயன்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

மேலும், 150 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய ஏ320 நியோ ரக விமானங்கள் இரண்டும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 188 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய டபிள்யூ 321 நியோ ரகத்தைச் சேர்ந்த 4 விமானங்கள் உள்ளதாகவும், அவற்றில் தற்போது 3 விமானங்கள் உதிரிப்பாகங்கள் இல்லாததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானங்கள் உதிரிப்பாகங்களின்றி நிறுத்தப்படுவதால் விமான சேவைக்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 12 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 19

சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 12 பேர் வடக்கு கடற்பிராந்தியத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாமுனை மற்றும் சுண்டிக்குளம் பகுதிகளுக்கு அப்பாலுள்ள கடற்பிராந்தியங்களில் கடந்த 2 நாள்கள் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக இரவு வேளையில் சுழியோடியமை மற்றும் தடை செய்யப்பட்ட முறையில் மீன்பிடித்த 12 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் 03 டிங்கி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார், தாழையடி, பிள்ளையார் கோவிலடி, புதுக்குடியிருப்பு மற்றும் ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# வடக்கு-கிழக்கில் சீனாவின் ஆதிக்கம் இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஏப். 19

**இலங்கைக்கு சீனா கடன் வழங்கியுள்ளது என்பதற்காக வடக்கு-கிழக்கிலுள்ள காணிகளை அபகரிக்கும் செயல்பாட்டை உடனடியாக நிறுத்தவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.**

வடக்கு-கிழக்கில் சீனாவின் ஆதிக்கம் என்பது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் எனவே சீன அரசாங்கம் தமிழர் பகுதிகளுக்கு ஊடுருவுவதை தவிர்த்து கொள்ளவேண்டும் என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அரசாங்கத்திடம் மீள கடனை பெற்றுகொள்வதற்கான வழிகளை சீன அரசாங்கம் பின்பற்றவேண்டும். மாறாக அரசாங்கத்திற்கு வழங்கிய கடன்களுக்கு ஈடாக, வடக்கு கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் காணிகளை அபகரிப்பதை நிறுத்த வேண்டும்.

குறிப்பாக அம்பாந்தோட்டை மற்றும் அதனை அண்டிய பகுதியில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு என்பன சீன அரசாங்கத்திற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாகவே வடக்கு-கிழக்கிலும் சீனர்கள் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

குறிப்பாக கடலட்டைக் குஞ்சுகளை வளர்க்கக்கூடிய தொழில்நுட்பம் சீனர்களிடம் மாத்திரமே உள்ளதால், கடலட்டைப் பண்ணைகளை ஊக்குவிக்கும் நோக்கில் வடக்கு மீனவர்களை சந்திக்கின்றனர். வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மீனவர்களுக்கு உலர்உணவுப் பொருட்களை இலவசமாக வழங்கி வருகின்றனர். இவ்வாறு வடக்கில் பல வேலைத்திட்டங்களை சீனா முன்னெடுத்துள்ளது. அவற்றை உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றார். (அ)

# புனர்வாழ்வு முகாமில் இருந்து தப்பிய கைதிகள் பிடிபட்டனர்

கொழும்பு, ஏப். 19

பதுளை - தல்தென பகுதியிலுள்ள இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலையிலிருந்து தப்பிச்சென்ற அனைத்து கைதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

பயிற்சிப் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள வனப்பகுதியிலிருந்து குறித்த கைதிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பதுளை - தல்தென பகுதியிலுள்ள இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலையிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 09 கைதிகள் தப்பிச் சென்றிருந்தனர்.

தப்பிச்சென்ற கைதிகள் போதைப்பொருளுக்கு அடிமையானதால், புனர்வாழ்வு பெற்று வந்ததாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் கூறினார். (அ)

# இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் காலி முகத்திடலில் நடத்த அனுமதியில்லை

கொழும்பு, ஏப். 19

கொழும்பு-காலி முகத்திடலை பொது மக்கள் இடையூறு இன்றி நேரத்தை செலவிடும் இடமாக மாத்திரம் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில், காலி முகத்திடலில் சமய நிகழ்வுகள் தவிர்ந்த எந்தவொரு இசை நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள் அல்லது பிற ஒன்றுகூடலுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, 220 மில்லியன் செலவில் காலி முகத்திடலை அபிவிருத்தி செய்யும் பணியை இலங்கைத் துறைமுக அதிகாரசபை முன்னெடுத்துள்ளதாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் காலிமுகத்திடலில் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் காலி முகத்திடலுக்கு ஏற்பட்ட சேதங்களைத் தொடர்ந்து புனரமைப்புக்காக 6.6 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மக்கள் அதிகளவில் கூடினால் காலி முகத்திடலின் அழகைப் பேண முடியாத நிலை ஏற்படும் என்பதால் 20ஆம் திகதி முதல் சமய நிகழ்வுகளுக்கு மாத்திரம் காலி முகத்திடலைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# துறைமுகநகரில் அதிநவீன தனியார் வைத்தியசாலை!

கொழும்பு, ஏப். 19

கொழும்பு துறைமுக நகரத்தில் நவீன வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஆசிரி துறைமுக நகர தனியார் வைத்தியசாலைக்கும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி, சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் அந்த மருத்துவமனையை நிறுவி பராமரிக்கும் வாய்ப்பை ஆசிரி துறைமுக நகர தனியார் வைத்தியசாலை பெற்றுள்ளது.

மருத்துவமனையில் நோயாளருக்கான கட்டில்களுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வென்னப்புவவில் மூன்று சிறுவர்கள் புத்தாண்டு தினத்திலிருந்து மாயம்!

கொழும்பு, ஏப். 19

வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் புத்தாண்டு தினத்திலிருந்து காணாமல்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 வயதுடைய இருவரும் 14 வயதுடைய ஒருவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வென்னப்புவ தும்மலகெதர பிரதேசத்தில் வசிப்பவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போன இவர்களைக் கண்டுபிடிக்க வென்னப்புவ பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். முதற்கட்ட விசாரணையில் இவர்கள் மூவரும் ஒரே பாடசாலை மாணவர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்கள் கைத்தொலைபேசிகளை வைத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கர்ப்பவதி பெண் உட்பட இருவர் மீது வவுனியாவில் வாள்வெட்டு தாக்குதல்!

## சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது

வவுனியா, ஏப். 19

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் கர்ப்பவதி பெண் உள்ளிட்ட இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினத்தன்று இரவு 8.30 மணியளவில் வவுனியாவில் இருந்து பூவரசங்குளம் நோக்கி மோட்டர் சைக்கிளில் சென்ற 8 மாதக் கர்ப்பிணிப் பெண் மற்றும் அவரது தாயார் மீது பம்மைமடுப் பகுதியில் வைத்து வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் அணிந்திருந்த 6 அரைப்பவுண் நகை மற்றும் ஒன்றரை லட்சம் ரூபாய் பணம் என்பன கொள்ளையிடப்பட்டிருந்தன.

காயமடைந்த கர்ப்பிணிப் பெண் மற்றும் தாய் ஆகியோர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பூவரசங்குளம் பொலிஸார் 30 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (அ)

## பாராளுமன்றின்...

கிட்டியது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அதற்கான வாக்குறுதிப் பத்திரத்தை வெளியிட்டுள்ளது.

இந்த நிதி வசதிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் மார்ச் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கடன்வசதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை உறுதி செய்வதற்கும், குறித்த கடன் வசதிக்குரிய ஏற்புடைய பிரதான கொள்கைகளை உட்சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

அதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி செயல்பாடுகளுக்காக பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## அன்னை...

நண்பகல் 12.30 மணி முதல் 2 மணி வரை அன்ன தான நிகழ்வு நடைபெறும்.

பின்னர், பிற்பகல் 4 மணிக்கு கல்லடி திருச்செந்தூர் ஆலயத்திலிருந்து அன்னை பூபதியின் சமாதியை நோக்கிய நடைபயணம் நடைபெறும். மாலை 5 மணிக்கு சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் ஆரம்பமாகும் என்று அன்னை பூபதி நினைவுதின பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

இந்திய இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த காலத்தில் உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் என்ற இரு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1988 மார்ச் 19 முதல் ஏப்ரல் 19ஆம் திகதி வரை தண்ணீரை மட்டும் அருந்தி உண்ணாவிரதம் இருந்து அன்னை பூபதி உயிர்நீத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அம்மன்...

என்ற கருத்தை சட்டத்தரணி சுமந்திரன் முன்வைத்து வாதத்தை தொடக்கினார்.

தொலைபேசி மூலம் தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும் வன்முறைகள் ஏதும் ஏற்படக்கூடாது என்று தெரிவித்தே தாம் வழக்கு தொடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சட்டத்தரணிகள், சுமந்திரன், சிறீகாந்தா ஆகியோர் வாதங்களை முன்வைத்தனர்.

சிலை வைக்கப்படுவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் ஆனால், அதற்கு உரிய அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து வழக்கு தொடர்பில் எழுத்துமூல சமர்ப்பணங்களை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து இந்த வழக்கை எதிர்வரும் மே 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நேற்றைய தினம் நடந்த இந்த வழக்கில் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் என சுமார் 60 பேர் வரையிலானவர்கள் நீதிமன்றில் பார்வையாளர்களாக பங்கேற்றிருந்தனர். இதே வேளை நீதிமன்றத்தை சூழ அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

புத்தாண்டு தினத்தில் தீவகத்துக்கு செல்லும் ஒரே பாதையில் பண்ணை சுற்றுவட்டத்தில் நயினாதீவு நாகபூசணி அம்மனைப் பிரதிபலிக்கும் விதமாக சிலை ஒன்று நிறுவப்பட்டிருந்தது. இந்த சிலையை நிறுவியது யார் என்று தெரியாத நிலையில் அதை அகற்றுவதற்கு பொலிஸார் நீதிமன்ற உத்தரவை பெற்று அறிவித்தலை ஒட்டியிருந்தனர். இதைத் தொடர்ந்து நல்லை ஆதீனத்தில் கூடிய இந்து அமைப்புகள் அம்மன் சிலையை அகற்றுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்க நேற்று முன்தினம் முடிவு எடுத்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைச்சு...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன. இவற்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றமை வதந்திகளாகும். இவ்வாறான வதந்திகள் குறித்து அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படுவதில்லை.

அமைச்சரவை நியமனமொன்று வழங்கப்படுமானால் அது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டுக்கு அறிவிக்கப்படும். இதற்கமைய புதிய நியமனங்களை வழங்குவதற்கும் அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை - என்றார். (ஐ)

## அறகலய...

அரசாங்கம் கொண்டுவரும் புதிய சட்டமூலம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருக்கும் பேராசிரியர் உயன்கொட உத்தேச சட்டம் இலங்கையை ஒரு பொலிஸ் அரசாக மாற்றும். சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு பாரதூரமான அச்சுறுத்தலாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறகலய மக்கள் போராட்டத்துக்கு அரசாங்கம் வெளிக்காட்டியிருக்கும் எதிர்வினையே இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம். உண்மையில் மக்களிடம் இருந்து கூடுதல் எதிர்ப்புகள் வரும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. மக்கள் மோசமான பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மீட்சி செயல்திட்டம் சமூகத்தில் அதிருப்தியையும் அமைதியின்மையையும் தோற்றுவிக்கப்போகிறது. அதனால் அரசாங்கம் சட்டத்தின் ஆட்சிக்குள் தன்னால் இயன்றதை செய்வதற்கு முயற்சிக்கின்றது.

புதிய சட்டமூலத்தை இரண்டு கட்டங்களில் தோற்கடிக்கமுடியும். குடிமக்களால் அதை உயர்நீதிமன்றத்தில் தோற்கடிக்கமுடியும். சட்டமூலம் அரசமைப்பு ஏற்பாடுகளை வெளிப் படையாக மீறுகிறது. ஆனால், உயர் நீதிமன்றம் அதை எவ்வாறு நோக்கும் என்பதை எம்மால் எதிர்வு கூறமுடியாது. மக்களின் உரிமைகளுக்கும் ஜன நாயகத்துக்கும் உயர்நீதிமன்றம் அதி முன்னுரிமை கொடுக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

அரசமைப்பை மீறுவதாக அமைந்திருக்கும் சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு தேவை என்பதுடன் மக்களின் அங்கீகாரத்தை பெறுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த வேண்டியிருக்கும். இரண்டாவது கட்டமாக பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை தோற்கடிக்கமுடியும். ஆனால், எதிரணி பலவீனமானதாகவும் பிளவுபட்டதாகவும் இருக்கும் நிலையில் அது மிகவும் கஷ்டமான காரியமாக அமையும்.

பாராளுமன்ற நடைமுறைகளை தமக்கு அனுகூலமான முறையில் சாமர்த்தியமாக பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் அரசாங்கத்துக்கு தாராளமாக இருக்கிறது. அதனால் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும் என்று அஞ்சவேண்டியிருக்கிறது. ஊடகங்களும்கூட பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றன. புதிய சட்டமூலத்தால் பத்திரிகையாளர்கள் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது - என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## சீன...

திணைக்களத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## அடிப்படை...

வந்துள்ளது.

உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைக்காக ஆசிரியர்களுடன் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. செய்முறை பரீட்சை தாமதிக்காமல் நடத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய தாமதத்தை முடியுமானளவு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், தொடர்ந்து தொழில் சங்க போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் பிள்ளைகளும் இந்த பரீட்சையில் தோற்றி இருக்கின்றனர். அதனால் அவர்களுக்காகவும் ஏனைய மாணவர்களுக்காகவும் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் இணைந்து கொள்ளுமாறு அவர்களை கேட்டுக் கொள்கிறேன் - என்றும் அவர் கூறினார்.

## சூத்திரதாரிகளை...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்தார். இதன்போது செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். இந்த விடயம் ஆழமாக ஆராய்ந்து பார்க்கவேண்டியதாகும். உயிர் ஒன்று இல்லாமல் போனால் அதற்கு நியாயம் கிடைப்பதில்லை. பணத்தால் அதனை மதிப்பிட முடியாது. இலங்கையில் பெருமளவில் உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இழக்கப்பட்ட உயிர்களின் எந்தவொரு சூத்திரதாரியையும் இதுவரை கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கிறது. அதனால் தேடுவதற்கு முயற்சிக்கவும் வேண்டாம் - கிடைக்கப்போவதும் இல்லை.

இலங்கையின் பாதுகாப்பு முக்கியமாகும். அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவசியமாகும். தமிழ், சிங்கள, முஸ்லிம் என பாராளுமன்றத் தலைவர்கள் 125பேர் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் கொலை சூத்திரதாரிகளில் ஒரு சிலரையேனும் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது - துப்பாகிதாரி ஒருவரைக்கூட கண்டு பிடிக்க முடியாமல் போயிருக்கிறது. சுதந்திரத்துக்கு முன்னாலும் கூட இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அரசர்கள்கூட கொலை செய்யப்பட்டனர்.

எனவேதான், இலங்கையின் ஜனநாயகமும் எஞ்சியிருக்கும் அரச தலைவர்களும் அழிக்கப்படுவதற்கு இடமளிக்காமல் தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து மக்களும் - சகல அரசியல் கட்சிகளும் தேசிய மட்டத்தில் ஒற்றுமையாக செயல்படுவதற்கு ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

மத வழிபாட்டின்போது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த சம்பவம், இலங்கையில் இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னர் அரந்தலாவை பிக்குகள் கொலை செய்யப்பட்டமை, தலதா மாளிகைமீதான தாக்குதல் இதே போன்று தமிழ், முஸ்லிம் மத வழிபாடுகளின்போதும் தாக்குதல்களில் உயிர்கள் இழக்கப்பட்டன. அதனால் இந்த கலாசாரத்தில் இருந்து மீள்வதற்காக ஒற்றுமையாக செயல்பட முன்வருமாறு ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுக்கிறார் - என்றார். (ஐ)

# சிசு இறப்பு தொடர்பில் மருத்துவர்கள் சாட்சியம்!

வடமராட்சி, ஏப். 19

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் பிரசவத்தின் போது சிசு இறந்ததாக குறிப்பிடப்படும் விவகாரத்தில், நேற்றைய தினம் மருத்துவர்கள் இருவர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தனர்.

இளம் குடும்பப் பெண்ணொருவர் பிரசவத்துக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிசு உயிரிழந்த நிலையில் பிரசவமானது.

சிகிச்சையளிப்பதில் கவனக்குறைவாக இருந்ததால் மரணம் நிகழ்ந்ததாக சட்ட மருத்துவ அதிகாரி அறிக்கையிட்டிருந்தார்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த விவகாரத்தை பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கையிட்டனர். நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மரண விசாரணையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், நேற்றைய தினம் பருத்தித்துறை மருத்துவமனையின் மகப்பேற்று மருத்துவர்கள் இருவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினர். பிரசவ விடுதியில் பணியாற்றிய தாதிய உத்தியோகத்தர்கள் இன்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்க அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## சர்வகட்சி...

மக்களை முட்டாள்களாக்கும் ஹிட்லர் பாணி பிரசாரங்களை செய் கின்றனர் என்று சஜித் பிரேமதாஸ விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாம் பொதுத் தேர்தலை அல்லது ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு கேட்கிறோம். இல்லாவிடின் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி மக்களின் நாடித் துடிப்பைத் தீர்மானிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நாம் கோருகின்றோம். மக்கள் அதற்கான சமிக்ஞையை வழங்கினால் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து பரிசீலிப்போம்.

அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் இணைவதை மறுத்து கடந்த மூன்று வாரங்களுக்குள் சஜித் பிரேமதாஸ விடுத்த இரண்டாவது அறிக்கை இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம், மன்னார், காத்தான்குடி, கண்டி, கதிர்காமம் ஆகிய ஐந்து இடங்களில் இருந்து 'பாசத்துக்கான யாத்திரை' ஆரம்பமாகவுள்ளது.

வட பகுதிக்கான யாத்திரை இன்று காலை நல்லூர் கந்தன் ஆலயத்தில் வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமாகும். யாழ்ப்பாணத்தில் கையெழுத்து சேகரிப்பு நடத்தப்பட்டு கிளிநொச்சி, வவுனியா என யாத்திரை செல்லவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையில் நாட்டின் 5 இடங்களில் இருந்தும் இன்று யாத்திரைகள் ஆரம்பமாகும். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பைச் சென்றடையும் யாத்திரையின் இறுதி நிகழ்வில் நாட்டின் பல உண்மைகள் தெரியவரும்.

அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் பாசத்துக்கான யாத்திரையில் ஐக்கிய மக்கள் சக்தியும் கைகோக்கிறது. இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் இலங்கையர்களாக வாழ்வதற்கான அடிப்படை உரிமையை கோருவதே இந்த யாத்திரையின் முக்கியமான நோக்கம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஐ.எம்.எவ். ஒத்துழைப்பால் மட்டும் நாடு முன்னேற்றமடைய முடியாது

## சுட்டிக்காட்டுகின்றது மொட்டு கட்சி

கொழும்பு, ஏப். 19

**சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளதால் மாத்திரம் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை 16 தடவைகள் பெற்றுக் கொண்டுள்ள பின்னணியில் வங்குரோத்து நிலை அடைந்துள்ளோம்.

வெளிநாட்டு கடன்களைப் பெற்று அதனை முறையாக செயற்படுத்தாத காரணத்தினால் அரசமுறை கடன்கள் பொருளாதார பாதிப்பை மேலும் வலுப்படுத்தியது.

2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு கடன்கள் முறையான முதலீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டன.

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்கு இறுதி தீர்வாக அமையாது.

நிலையான மாற்றத்துக்கான கொள்கைத் திட்டம் பொதுஜன பெரமுன வசம் உள்ளது. கட்சியின் கொள்கையை அடிப்படையாக கொண்டு செயற்படுவோம்.

ஜனநாயகம்,பொருளாதார மேம்பாடு ஆகிய காரணிகளை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற வகையில் கட்சி என்ற ரீதியில் ஆதரவு வழங்குகிறோம். ஜனாதிபதிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் நல்லிணக்கப்பாடு காணப்படுகிறது.

நாட்டு நலனுக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

மறுபுறம் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அப்போது எமது அதிகாரத்தை வெளிப்படுத்துவோம் என்பதை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# குரங்குகளுக்கும் அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை!

## பல்டி அடித்தார் அமைச்சர் பந்துல



கொழும்பு, ஏப். 19

இலங்கையில் உள்ள குரங்குகளைச் சீனாவுக்கு அனுப்புவது தொடர்பில் இரு நாட்டு அரசுகளுக்கிடையில் எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனினும் சீனாவிலுள்ள தனியார் நிறுவனமொன்றே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக பந்துல குணவர்தன மேலும் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள குரங்குகளைச் சீனாவுக்கு அனுப்பும் திட்டம் தொடர்பில் அண்மைக் காலமாக செய்திகள் வெளியாகி வந்த நிலையில் அமைச்சர் பந்துல இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (அ)

# எரிபொருள் அளவில் மாற்றமில்லை

கொழும்பு, ஏப். 19


பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் அளவை எதிர்வரும் ஒரு வாரத்திற்கு அவ்வாறே தொடர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு எரிபொருள் அளவை அதிகரிக்க கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

கியூ.ஆர் முறையின் கீழ் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் அளவை எதிர்வரும் ஒரு வாரத்திற்கு தொடர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 06 - 05 - 1932 | 15 - 04 - 2023 |



## இராஜா கார்த்திகேசன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்(1992)

யாழ். நவாலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெஹிவளையை வதிவிடமாகவும், பிரித்தானியா லண்டன் Colindale ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜாகார்த்திகேசன் அவர்கள் 15.04.2023 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராஜா செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பிமல்ராஜ் (லண்டன்), பிறேமிளா (லண்டன்), ரஞ்சனா (லண்டன்), ஜெசிந்தா (அவுஸ்திரேலியா), ஜெகராஜ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகலா (லண்டன்), காலஞ்சென்ற ஸ்ரீரவீந்திரன் (லண்டன்), ஜீவகாந்தன் (லண்டன்), துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), மெலனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீபுவனா, ஸ்ரீனிவாஸ், அருணன் - எமெலி, கிரிஷானி- சாருஜன், அஜேன், அனீத்தா- ஆத்மன், அருஷன், அபிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும், ஈவா, அலிஸ், மாயன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 23.04.2023 அன்று காலை 9.30 முதல் 12.00 மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

**குடும்பத்தினர்.**

# இந்திய - இலங்கை கப்பல் சேவையை முன்னெடுப்பதில் மேலும் தாமதம்!

கொழும்பு, ஏப். 19

இந்தியாவின் காரைக்காலுக்கும் யாழ்ப்பாணத்தின் காங்கேசன் துறைக்கும் இடையிலான கப்பல் சேவையை முன்னெடுப்பதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த கப்பல் சேவையை எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளதாக இண்ட்சிறி பெரி சேவிஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்தார்.

முன்னதாக குறித்த கப்பல் சேவை மார்ச் மாதத்தில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

பின்னர், துறைமுக உட்கட்டமைப்பு உள்ளிட்ட காரணங்களால், அதனை இந்தமாதம் 29 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தியாவின் சில அனுமதிகள் கிடைக்கப் பெறாமையினால் குறித்த கப்பல் சேவையை எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் இருந்து முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

150 பயணிகள் இந்த கப்பல் சேவையில் ஒரே தடவையில் பயணிக்க முடியும் என்பதுடன் 50 அமெரிக்க டொலர், ஒரு வழி கட்டணமாக அறவிடப்படவுள்ளது. (அ)

# கிராஞ்சி குடிதண்ணீர் திட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம்

கிளிநொச்சி, ஏப். 19

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிராஞ்சி குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் விநியோகிப்படுகின்ற குழாய் வழி குடிதண்ணீரானது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பமான நிலைமை காரணமாக நீர் மூலத்திலிருந்து தொடர்ச்சியாக நீரை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளமையால் கிராஞ்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழ் குழாய் வழி நீர் விநியோகிப்படுகின்ற கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிதண்ணீர் விநியோக்கப்படும் எனவும் எனவே பொது மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

# 7 மாவட்டங்களில் உச்ச வெப்பநிலை

கொழும்பு, ஏப். 19

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், அநுராதபுரம், குருநாகல், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வெப்பநிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளதுடன் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இந்த மாவட்டங்களில் மனித உடல் வெப்பநிலை தீவிர எச்சரிக்கை நிலை வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியிடங்களில் தேவையற்ற விதமாக நடமாடுவதை தவிர்க்குமாறும் அதிக நீரை பருகுமாறும் வெளிர் நிறத்திலான மெல்லிய ஆடையை அணியுமாறும் அந்த அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# சர்வகட்சி அரசு குறித்து எதுவுமே அமைச்சரவையில் பேசப்படவில்லை

## அமைச்சர் மகிந்த அமரவீர தகவல்

கொழும்பு, ஏப். 19

சர்வகட்சி அரசு தொடர்பில் அமைச்சரவையில் பேசப்படவில்லை என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சர்வகட்சி அரசு ஒன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதியோ, அமைச்சரவையோ இது வரையில் எவ்வித தீர்மானங்களையும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் எவ்வித பேச்சும் நடத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

சர்வகட்சி அரசு அமைக்கும் திட்டமிருந்திருந்தால் ஜனாதிபதி அது குறித்து அமைச்சரவையில் கருத்து கோரியிருப்பார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தற்போதைய பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் மட்டும் ஆதரவளிக்கப்படும் என பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.